திராவிடநாடு



கேட்டீரா சேதி!

தமிழ் நாட்டிலுள்ள ஆதிதிராவிட மக்களும் புத்தமதத்தில் சேர்ந்துவிடப் போகிறார்கள் — தேர்தலுக்குப் பிறகு, இந்த திட்டம் மும்முரமாகும், என்று தமிழ் நாடு ஷெட்யூல் காஸ்ட் பெடரேஷன் தலைவர் ரத்தினம் எம். எல். ஏ., குறிப்பிட்டார்.

தோழர் ரத்தினம் டாக்டர் அம்பேத்காரின் மதமாற்ற விழாவுக்குச் சென்றிருந்ததாகத் தெரிகிறது.

டாக்டர் அம்பேத்கார், தென்னகம் வர இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்,

*

தியாகிகள் — மனுச் செய்து பார்த்தனர் — பேட்டி கண்டு பேசிப்பார்த்தனர்—எதற்கும் காமராஜர் அசைந்து கொடுக்கவில்லை. இப்போது, திருப்பரங்குன்றத்தில் மாநாடு நடத்தி அதில் தங்கள் கருத்தைத்திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். தங்கள் கோரிக்கைகளைக் கவனித்து ஆவன செய்யாவிட்டால் நேரடி நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தீர்மானித்துள்ளனர்.

இதற்கு, நவம்பர் 15-ந் தேதியைக் குறித்துள்ளனர்.

*

கைத்தறி ஜவுளிக்கு, குறிப்பாக 'லுங்கி' ரகத்துக்கு அமெரிக்காவில், நல்ல மார்க்கட் கிடைக்க வேண்டும் என்பதற்கான முயற்சி, நீண்ட நாட்களாக பேச்சளவில் இருந்து வருகிறது; இப்போது, இதற்கான உருப்படியான ஏறபாடு செய்ய வழி ஏற்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலிருந்து மூன்று நிபுணர்கள் இது சம்பந்தமான, ஏற்பாடுகளைக் கவனிக்க இங்கு வருகிறார்கள். அவர்களில் ஒருவர் அமெரிக்கருக்கு எந்தவித 'மோஸ்தர்' பிடிக்கும் எனபது பற்றிய தகவல்களைத் தருபவர் எனறு தெரியவருகிறது.

அமெரிக்க மார்க்கட்டில் கைத்தறிக்கு நல்ல கிராக்கி கிடைப்பதற்கான வழிவகை செய்வதற்கு இந்த நிபுணர்களின் 'வருகை'யை ஆட்சியாளர்களும், கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

*

ஒரு பெண் திருந்தினால் ஒன்பது ஆடவர்கள் திருந்துவார்கள் என்று சொல்வது உண்டு. எதிலும் மாதர் ஈடுபட்டால் அதற்குத் தனி மகத்துவமே ஏற்படுகின்றது. பாருங்களேன், சாரை சஹேரன் என்ற ஊரில் பள்ளிக் கட்டிடமும் சமுதாயக் கூடமும் கட்டவேண்டும் பணம் தாரீர் தாரீர் என்று மாதக் கணக்காக வேண்டுகோள்களும் விண்ணப்பங்களும் வெளிவந்தன. யார் அதை எல்லாம் காதில் போட்டுக்கொண்டார்கள்? ஒரு நாள் குமாரி கமலா நாட்டிய நங்கையன்று) அந்த ஊரைச் சேர்ந்த ஒரு பெண்— தன் நகைகளை எல்லாம் விற்றாள்; 1000 ரூபாய் கிடைத்தது; கிடைத்த தொகையை நன்கொடையாகத்தந்தாள். உடனே பலர் போட்டிபோட்டுக்கொண்டு பணத்தைக் கொண்டுவந்து குவித்தார்கள். 5500 ரூபாய் சேர்ந்தது. பள்ளிக் கூடமும் சமுதாயக் கூடமும் உருப்பெற்றன.

*

'ஆசை நிலவே' என்று அடுத்த ஆண்டு ஜூலை மாதம் காதலன் அழைத்தால், "எந்த நிலவை அத்தான சொல்கிறீர்கள்?" என்று காதலி திருப்பிக் கேட்கலாம். இயற்கையுடன் போராடும் மனிதன் அதற்குப் போட்டியாகச் செயற்கைச் சந்திரன் ஒன்று படைத்துக் கொண்டிருக்கிறான். அடுத்த ஆண்டு ஜூலை மாதத்தில் அது வானவீதியில் வட்டமிடும் என்கின்றனர்.

அமெரிக்க நாட்டிற்காக கபர் இன்ஸ் என்ற தொழிலதிபர் அதைச் செய்யும் வேலையில் இப்போது ஈடுபட்டிருக்கிறார்.

பூமியிலிருந்து 1500 மைல் தூரத்தில் அது சுற்றும் என்றும், மெக்னீஷியம் கலந்து அது உருவாக்கப்படும் என்றும அதன் 'தோல்' ஒரு அங்குல கனத்தில் 30-ல் 1-பாகம்தான் இருக்கும் என்றும் அது பாட்டரியால் இயங்கும் என்றும் சொன்னார் அவர்.

"செலவு என்ன ஆகும்?" என்று கேட்டதற்கு "ஏராளமாக ஆகும" என்றாராம்.

ஆகாதா என்ன?

*

ஆண்டவன் அருள்பாலிப்பான; என்புருகப்பாடி அன்புருவாகலாம் என்றுதான் அந்தப் போலீஸ்காரர் சிவாஜிபேட் என்ற ஊரில் இருக்கும் 'கந்தோபா' கோயிலுக்குப் போனார். ஆனால் அவர் அங்கே கண்டது ஆண்டவனின் அருளை அல்ல, கள்ளச் சாராயத்தை. என்ன திகைப்பு, உண்மை மூலவருக்குப் பக்கத்தில் ஒரு டின், ஒரு புட்டி இவற்றில் கள்ளச்சாராயம் இருந்து கண்டுபிடிக்கப்பட்டதாம்.

*

மூடப் பழக்கங்களும் வழக்கங்களும் மலிந்த இந்து சமயத்தில் 'சதி' என்பது கொடுமை நிறைந்த ஒருமுறையாகும். கணவன் இறந்ததும் அகம் பெண்ணாக மனைவி வாழக்கூடாது என்று அவளையும் தூக்கிக கணவன் உடல் எரியும் நெருப்பில் இடுவார்களாம். இராசாராம மோகன்ராய்தான் இந்த மூடப் பழக்கத்தினை சாகடித்தார். பழமையின்வேர் இன்னும் பட்டுப்போகவில்லை என்பதற்கு அண்மையில் ஒரு சான்று கிடைத்துள்ளது.

ஜெய்பூருக்கு அருகில் 35-வயது அம்மை ஒருத்தி தன் கணவன் சிதையில் வீழ்ந்து இறந்தாளாம். செய்தி கிடைத்த உடன் சென்ற போலீசார் 11-பேரை இது சம்பந்தமாகக் கைது செய்துள்ளனராம்.

திராவிட நாடு

21-10-56 ஞாயிறு

மலர் 15] ★ [இதழ் 16

சங்கரலிங்கனருக்கு நமது அனுதாபம்

பாராட்டுகிரேம்

இந்து மதத்தைவிட்டு உளம் வெந்து கூட்டம் கூட்டமாக வெளியேறுகிற மக்களை, தனது அரவணைப்புக்குள் அன்புடன் தழுவிக் கொள்ளும் பணியினை, இப்போது புத்தநெறி ஆற்றி இருக்கிறது.

ஒரே இடத்தில், ஒரே நாளில், ஆடவரும் பெண்டிரும் சிறுர்களுமாகச் சேர்ந்து மூன்று இலட்சம் மக்கள், ஒரு மதத்தைவிட்டு வேருெரு மதம் புகுந்த சம்பவம், அதிலும் இந்துமதத்தைவிட்டுப் புத்தமதம் தழுவிய செய்தி, இது வரை வரலாற்றில் இடம்பெற்றிருக்கவில்லை. இம் மத மாற்றச் செய்தியைச் சித்தரித்துள்ள ஒரு நிருபர், "உலகில் வேறு எங்கும் நடைபெருத இந்தச் சம்பவம் நடைபெற்றது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று இலட்சம் மக்கள் கூடியிருந்த காட்சியையும், அந்த இடத்தின் பரப்பையும், அதே நிருபர், "நகருக்கு வெளியே 10 இலட்சம் சதுர அடி விஸ்தீரணமுள்ள மைதானம்" என்றும், "மைதானம் முழுதும் ஒரே ஜனசமுத்தரமாகக் காணப்பட்டது" என்றும் வரைந்துள்ளார்.

இந்து மதத்தைவிட்டு வெளியேறும் திருப்பணி இன்றுநேற்று ஏற்பட்டதன்று. இவ் வெளியேற்றம் தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது.

இருந்தாலும், மூன்று இலட்சம் மக்கள் ஒரே நாளில் ஒரே இடத்தில் கூடி, இந்து மதத்திலிருந்து நீங்கிப் புத்தமதம் புகுந்திருப்பது, இந்துமதப்பாதுகாப்பாளர்களுக்கு பேரதிர்ச்சி தரும் சம்பவமாகும்.

இதற்குமுன் மதம் மாறி இருப்பவர்கள், பொன்னுசைக்கும் பொருளாசைக்கும் பலியாகியும்; அந்தஸ்துக்கும் அதிகாரத்திற்கும் அடிமையாகியும், மதம் மாறி இருப்பவர்களாகும் எனக் கூறுவது மிகைபடக் கூறியதாகாது.

ஆனல், மூன்று இலட்சம் மக்களுடன் இன்று புத்த நெறியில் புகுந்துள்ள டாக்டர் அம்பேத்காரின் மதம் மாற்றச் செய்தி, அப்பட்டியலில் சேர்த்துஎண்ணத் தக்கதன்று.

டாக்டர் அம்பேத்கார் இந்து மதத்தின் உள்ளடக்கத்தை நன்கு கற்றிருப்பவர்; அவர் கற்காத இந்துமதத் தொடர்புடைய வடமொழி வேதாகம நூற்கள் இல்லை என்றே சொல்லலாம்.

இந்திய அரசியல் சட்டங்களை உருவாக்கக்கூடிய அளவிற்கு சட்ட நூல் பயிற்சி பெற்றிருப்பவர்.

அத்தகைய ஒரு பேராசிரியர் இந்து மதத்தை உதறித் தள்ளிவிட்டு, மூன்று இலட்சம் மக்களுடன் புத்த நெறியை மேற்கொண்டார் என்பது சாதாரண மானவர்கள் இந்து மதத்தை வெறுத்து ஒதுக்கிவிட்ட சம்பவம்போல் கருதக்கூடியது அல்ல.

புத்தநெறி தழுவிய டாக்டர் அம்பேத்கார்,

"பிரம்மா, விஷ்ணு, மகேஷ், கபாலி, கணபதி மற்றும் இந்துமத தெய்வங்களை கடவுள்களாகக் கருதமாட்டேன். கடவுள் அவதாரத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. எந்த விதச் சடங்கிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. புத்தரை விஷ்ணு அவதாரமாக நம்பவில்லை, சடங்குகள் செய்விக்கப் பார்ப்பனர்களை அழைக்கமாட்டேன். தீண்டாமையை அனுஷ்டிக்கமாட்டேன். எல்லா மனிதர்களையும் சமமாகக் கருதுவேன். பஞ்சசீலக் கொள்கையை அனுஷ்டிப்பேன்."

என உறுதிமொழி எடுத்துக் கொண்டு இருக்கிருர்.

அந்த உறுதிமொழியே இந்து மதத்தின் உட்பொருளையும், புத்த நெறியின் கோட்பாடுகளையும் தெளிவுபடுத்துவதாக அமைந்திருக்கிறது.

இம் மதமாற்றச் சேதி, இந்து மதக் காப்பாளர்களிடம் என்றும் போல் சிந்தனையைத் தூண்டத் தவறிவிட்டது. வழக்கமாக அவர்களுக்கு ஏற்படுகிற எரிச்சல், இச் சேதி கேட்டு ஏற்பட்டு இருக்கிறது.

காங்கிரஸ் ஆளவந்தார்களும், இம்மதமாற்றத்தை வழக்கம்போல் நையாண்டி செய்வதிலும், இம்மத மாற்றத்தின் நடுநாயகமாக இருக்கும் டாக்டரைத் தூற்றுவதிலும் மன்ச் சாந்தி தேடிக்கொள்ள முன்வந்திருக்கின்றனர்.

இப்பெரும் வரலாற்றுச் சம்பவத்தை, மிகமிகச் சாதாரண சம்பவம்போல் நாட்டு மக்களுக்கு அறிவிக்கும் பாணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை, சிறிய சம்பவமெனக் காட்ட அவர்கள் எவ்வளவுதான் முயன்றபோதிலும், அவர்களுக்கு ஏமாற்றமே கிடைக்கும்.

அவர்கள் இயல்பு அது; அதை மாற்ற எவரால் முடியும்? சிறுத்தைத் தன் புள்ளிகளை மாற்றிக்கொள்ள ஒப்புமா?

இவர்கள் வாயுரையைக் கேட்டா உலக மக்கள், இம்மதமாற்றத்திற்குத் தரப்படவேண்டிய மதிப்பின் அளவைத் தீர்மானித்துக்கொள்ளப் போகிறார்கள்? ஒருக்காலுமில்லை.

டாக்டர் அம்பேத்காரின் மத மாற்றச் சம்பவம், உலக மக்களின் சிந்தனையைத் தூண்டத் தவறிவிடாது.

மூன்று இலட்சம் மக்களை உடனழைத்துக்கொண்டு டாக்டர் அம்பேத்கார் ஏன் இந்து மதத்தைவிட்டு வெளியேறத் துணிந்தார் என்ற கேள்வியை, பல்வேறு நாடுகளிலுமுள்ள அறிஞர் பெருமக்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டுக்கொள்ளத்தான் போகின்றனர்.

சட்டப்படி தீண்டாமை இந்தியத் துணைக்கண்டத்தில் ஒழிக்கப்பட்டுவிட்டது என்ற விதியைக் கொண்டுள்ள இந்திய அரசியல் சட்டம் அதற்குரிய விடையைத் தராது.

இந்தியத் துணைக்கண்டத்தில் மதமாற்றத்திற்காக வெளிநாட்டினர் ஒன்பது கோடி ரூபாயைச் செலவிடுகின்றனர் என நியோகியின் நியாயத்தை எடுத்துக்காட்டி காஞ்சி காமகோடி பீடத்தார் 'இந்துமதத்தை அழிக்க அந்நிய நாட்டினர் இவ்வளவு பெருந்தொகையைச் செலவிட்டுள்ளனரே!' எனப் பேசும் பேச்சு, மேற்குறிப்பிட்ட வினாவிற்குத் தக்கவிடையாக அமைய முடியாது.

உலக அமைதிக்குப் பாடுபடுவதாகக் கூறிவரும் நேருவின் நாட்டில், ஒரே நாளில் மூன்று இலட்சம்பேர் இந்துமதத்தைத் துறக்கும் அளவிற்கு, இன்னமும் தீண்டாமையின் கொடுமை இருந்துவருகிறது என்றுதான், உலக மக்கள் முடிவு கட்டுவர். அந்தக் கருத்தை மாற்ற நேருவின் பஞ்சசீலப் பேச்சும், இந்திய அரசியல் சட்ட சமரசப் பூச்சும், தேசீயஏடுகளின் தூற்றல் கணைகளும், பயனற்றவைகளாகும்.

இந்துமதத்தைவிட்டு மக்கள் ஏன் கூட்டம் கூட்டமாக இப்பொழுதும் வெளியேறி வருகிறார்கள் என்பதற்கான மூல காரணத்தைத் தேடிக் கண்டறிந்து, அதைக் களைந்தெறியவேண்டிய கட்டாயம் காங்கிரஸ் ஆளவந்தார்களுக்குக் குறைவாக இருக்கலாம்; அப்பணி தங்கள் பொறுப்பு அல்ல என்றுகூட அவர்கள் கருதலாம்.

ஆனால், காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரியாரின் நிலை அதுவாக இருக்கமுடியாது.

தனது மதிப்புக்கும், வருவாய்க்கும் இந்துமதத்தைமட்டுமே நம்பி உயிர்வாழ்ந்து உயர்நிலையில் வீற்றிருப்பவராவர், சங்கராச்சாரியார்.

எப்பொழுதும்போல், சரிந்துவரும் தனது மதிப்பையும், குறைந்துவரும் தனது வருவாயையும், இருக்கும் நிலையளவாவது பாதுகாத்துக்கொள்ளும் போக்குடையதாகத்தான், சங்கராச்சாரியாரின் இப்பொழுதைய செய்தியும் அமைந்திருக்கின்றதேயல்லாது, இந்துமதத்தை மற்றவர்கள் விரும்பி ஏற்கும் வகையில் இல்லையானாலும், இருக்கிறவர்களாவது தாங்கள் இறக்கும்வரை அதிலேயே ஒட்டிக்கொண்டு இருக்கும் வகையில், அதைப் புனிதமுடையதாக ஆக்கும் விருப்புக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

9-கோடி ரூபாய் வெளி நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு இந்து மதத்திலிருப்போரை தங்கள் மதத்துக்கு மாற்றுவதற்குப்பயன்படுத்துகிறார்கள் என்று ஓலமிடும் சங்கராச்சாரியார், இதுவரை தாழ்த்தப்பட்ட மக்களை முன்னுக்குக் கொண்டுவர, கோடிக் கணக்கு இருக்கட்டும்—எத்தனை இலட்சம் எத்தனை ஆயிரம் செலவிட்டிருக்கிறார்? புள்ளி விபரம் காட்ட முடியுமா என்று கேட்கிறோம்.

அரேபியாவிலிருந்து இஸ்லாம் மார்க்கம்தான் இறக்குமதியாயிற்றே தவிர, இன்றுள்ள இஸ்லாமியர்கள் அனைவரும் அங்கிருந்து இங்கு வந்து குடியேறினவர்களன்று. என்றோ ஒரு நாள் இந்துமதத்திலிருந்தவர்கள் தான் இன்று முஸ்லீம்களாக இருப்பவர்கள் அனைவரும்.

அன்றொரு காலத்தில் நூற்றுக்கணக்கில் இருந்து வந்த முஸ்லிம்கள், இன்று ஒன்பதுகோடி என்ற கணக்கில் பெருகிவிட்டனர் என்பதற்குரிய நியாயமான காரணத்தை இந்துமதத்தில்தான் கண்டுபிடித்தாகவேண்டும்.

இதுபோலவே கிருத்துவ மதம் இங்கு ஏன்—எப்படிப்பரவ முடிந்தது என்பதனை அம்பேத்காரின் மத மாற்றத்தை நையாண்டி செய்யும் போக்கினர் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மூன்று இலட்சம் மக்களுடன் டாக்டர் அம்பேத்கார்மட்டுமல்ல, வேறு பல இலட்சக்கணக்கானவர்களும் வெளியேறிச் செல்லும் நிலை இருக்கத்தான் செய்கிறது.

தீண்டாமை, பாராமை, நெருங்காமை, பிறப்பினால் உயர்வு தாழ்வு போன்ற மிக மிகக் கொடிய தொத்துநோய்க் கிருமிகள் குடியேறியுள்ள மாளிகை, தங்கத்தால் ஆக்கப்பட்ட அரண்மனையாக இருந்தாலும், அங்கு டாக்டர் அம்பேத்கார் போன்றவர்கள் நீண்டநாள் வாழ ஒப்பமாட்டார்கள்; வெளியேறித்தான் தீருவர்.

டாக்டர் அம்பேத்காரின் இந்த மத மாற்றம் நல்லறிவாளர்கள் அனைவருடைய பாராட்டுதலுக்கும் உரியதாகும். ★

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நாளது 26—10—56 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு எனக்கும், தோழியர் பரமேசுவரிக்கும் தஞ்சை மாவட்டம் திருவீழிமிழலை கீழ வீதியில் உள்ள மணமகள் இல்லத்தில், அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்குத் தாங்கள் இதனையே அழைப்பாகக்கொண்டு வந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

சேலம்,
10—10—'56.

அன்பன்,
வி. சிவப்பிரகாசம்.


காஞ்சீபுரம்
21—10—'56
தம்பி !
நடுநிசி! தூக்கம் வரவில்லை; துக்கம் துளைக்கிறது; வெட்கமும் வேலாகக் குத்து
கிறது; கொழுந்து விட்டெரியும் பெருநெருப்பும், அதிலே கிடத்தப்பட்டுள்ள தியாகத்
திருமேனியும், தெரிகிறது; தீ என்னைத் தீண்டாது, தீயோரின் பிடியிலிருந்து நான்
விடுதலை பெற்றுவிட்டேன், தீரமற்றோரே! தெளிவற்றோரே! இனி தீ உங்களைத்தான்
தாக்கும்! வெந்து வேதனைப்படுங்கள்! உணர்ச்சியற்ற உருவாரங்களே! உண்ண,
உடுக்க, இருக்க, வழி கிடைத்தால் போதும் என்று எண்ணி, அவைதமைப் பெற
'எடுபிடி'யாகவும், இழி நிலையைச் சகித்துக்கொள்ளவும் சம்மதித்துக்
கிடக்கும் சத்தற்ற ஜென்மங்களாகி விட்டீர், சடங்களே! கருகிப் பொடி
யாகட்டும், எனக்கென்ன! இதோ நான் கண்மூடி விட்டேன்! இனி
உங்களைத் திரும்பிப்பாரேன்! செல்கிறேன், சிந்திக்கவும் செயலாற்றவும்
திறனற்றுப்போன உம்மைக்காணக் கூசினேன், இந்த நிலை பெற்றீரே
என்றெண்ணிக் குமுறினேன், இனி இவர்தம் கூட்டுறவு வேண்டாம்
என்று துணிந்தேன், சாவை வரவேற்றேன்! நான் மறைகிறேன்,
நீங்கள் உலாவுங்கள்!! நான் இறந்துபடுகிறேன், நீங்கள் இளித்துக் கிடவுங்கள்!
எனக்கு மானம் பெரிது, உயிர் அல்ல; உயிரை இழக்கிறேன்! உலுத்தருக்கு உயிர்
தான் வெல்லம், அதைச் சுமந்துகொண்டு திரியுங்கள்! சவத்துக்கும் உயிர் உள்ள
சடத்துக்கும் என்ன மாறுபாடு? உணர்ச்சிதானே, இரண்டினையும் வேறுபடுத்திக்
காட்டுவது! உணர்ச்சியற்றுக் கிடக்கும் உம்மை, மாந்தர் என்றும் மறத் தமிழர்
என்றும் கூற என் நா, கூசுகிறது! இதோ இனிநான் பேசப்போவதில்லை! போகிறேன்,
பொல்லாங்கும் பழியும், புல்லர் வாழ்வும் பூசலும் நிரம்பிய இந்த இடத்தைவிட்டே
அகன்று செல்கிறேன்! சாக்கடையில் நீங்கள் உழலுங்கள், சாக்காடு எனக்குச் சாந்தி
அளிக்கட்டும்! பதைக்கிறீர்கள், துடிக்கிறீர்கள்; ஆஹா! என்கிறீர்கள், ஆகட்டும்
என்று ஆர்ப்பரிக்கிறீர்கள்; யார் தெரியுமா என்று உருட்டுகிறீர்கள், என்ன செய்
வேன் தெரியுமா என்று மிரட்டுகிறீர்கள்; எல்லாம், எதற்கு? ஒரு சிறு பொருள் உன்
காத்தை விட்டுப் போவதானால்! ஒரு சிறு சொல் உம் மீது எவனேனும் வீசுகிறா
னென்றால்! சுயநலத்துக்குக் குந்தகம் விளைகிறது என்றால், சூரத்தனமாகக் கிளம்பு
கிறீர்கள், போராடுகிறீர்கள்! தாயகம் பழிக்கப்படுகிறது, தாயகம் இழிநிலை பெறு
கிறது, ஏன் என்று கேட்கும் துணிவு இல்லை, உங்கட்கு! தாயகம் தருக்கரின் காலடி
யில் சிக்கிச் சீரழிகிறது; தடுத்திடும் ஆற்றல் இல்லை, உங்களுக்கு! மொழி அழிக்கப்
படுகிறது, உமது விழியிலே நீர் சோரக்கூடக்காணோம். தன்மானம் அழிக்கப்படுகிறது,
தடுத்திடக் கிளம்புகிறீர்களா? இல்லை! தாளேந்திக் கிடக்கிறீர்கள்! நத்திப் பிழைத்
திடவும், நமக்கென்ன என்று ஒதுங்கிக் கிடக்கவும், நம்மால் ஆகுமா என்று பெரு
மூச்செறியவும் கற்றீரேயன்றிக் கடமை உணர்ச்சியை எங்கே கொண்டீர்! வீரர் வழி
வீரத் தியாகி

வந்தோரே! வெற்றி முரசு கொட்டினோரே! தமிழர்காள்! தரணி புகழப் பரணி பாடிய பரம்பரையினரே! கடலில் கலம்செலுத்தி, கரிப்படை கொண்டு கருங்கற் கோட்டைகளைத் தூளாக்கி, வேற்படை கொண்டு மாற்றாரை விரட்டி, வாகை சூடிய வெற்றி வீரர் வழி வந்தோரே! என்றெல்லாம், ஏடு உம்மைக்குறித்து குறிப்பிடுகிறது; நாடு நலியக் கண்டும், வலியோர் சிலர் எளியோர்தமை வாட்டிடக் கண்டும் வாய்திறந்து கேட்கவும் வக்கற்றுக் கிடக்கிறீர்! உம்மோடு, நான் இருக்கச் சம்மதியேன்! உம்மில் ஒருவனாக இருக்க என் மனம் இடம்தரவில்லை! நான் பிணமாகிறேன், பேசும் பிணங்களே! குடும்பம் அழைக்கிறது, சென்று குதூகலமாகக் காலங்கடத்துங்கள், சூட்ட வருவான் கொடியோன்! குனிந்து கிடவுங்கள். குறை கூறுதீர்கள், குண்டாந்தடியுடன் வருவான், கோலோச்சுவோரின் ஏவலன், இழிவாகப் பேசுவான், இனிமை, இனிமை! என்று கூறுங்கள் — இல்லையெனில் இருட்டறையில் தள்ளிப் பூட்டிவிடுவான்! வாழவேண்டுமே என்பீர், வாழுங்கள், வாழுங்கள், மானம் இழந்து, உரிமை இழந்து, உணர்ச்சி இழந்து, உயிரைச் சுமந்துகொண்டு உலவுங்கள்! என்னால் முடியாது! இதோ, நான் மரணத்தைத் தழுவிக்கொண்டேன்! மலர் தூவிய மஞ்சம் உமக்குக் கிடைக்கக்கூடும், மானத்தை இழந்த பலருக்குக் கிடைக்கும், எனக்கு இந்த நெருப்புப் படுக்கை போதும்! பிடிசாம்பலாகிறேன்! பேதையாய், தலையாட்டிப் பதுமையாய், அடிமையாய்க்கிடந்து உழல்வதைக் காட்டிலும், பெருநெருப்புக்கு என்னை ஒப்படைத்து விடுவது சாலச் சிறந்தது! எனவே, நான் செல்கிறேன், நீங்கள், பூச்சி புழுக்களும், சீச்சீ என்று இகழ்ந்திடும் விதத்தில் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டு கிடவுங்கள்!— என்று நம்மை நோக்கி, பெருநெருப்பில் கிடத்தப்பட்டுள்ள பெரியவர் பேசுவது போன்றதோர் பிரமை ஏற்படுகிறது! அவர் இதுபோலெல்லாம் நம்மை ஏசி இருக்கக்கூடாதா —ஏசியிருந்தாலாவது ஒரு வகையில், நன்றாக இருந்திருக்கும் — அந்தப் பெருங்குணவான், ஒருதுளி ஏசினாரில்லை, நமது இழிநிலை கண்டு இரக்கப்பட்டு இறந்துபட்டேனும், நமக்கு உய்யும் வழி கிடைத்திடச் செய்வோம் என்று எண்ணினாரேயன்றி, ஏடா! மூடர்காள்! என்று சினந்துகொண்டாரில்லை! இறந்துபட்டார்—நமக்காக இறந்துபட்டார்—நாட்டுக்காக உயிர் துறந்தார் — நாமெல்லாம் நடைப்பிணமாகிவிட்டோம் என்பதறிந்து வேதனையுற்றார் — உயிர் துறந்தார்! உயிர் போகிறது— போய்க்கொண்டே இருக்கிறது என்று அறிந்தார் — விநாடிக்கு விநாடி மரணவாயிலை நெருங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தார்— சாவை வரவேற்றார்! நாம் வாழ்கிறோம்! வெட்கமின்றி, வாழ்ந்துகொண்டு கிடக்கிறோம் — வெந்து சாம்பலாகிவிட்டார் அந்த வீரத்தியாகி! எண்ணும்போது, இதயத்தை யாரோ சம்மட்டிகொண்டு தாக்குவது போலாகிவிடுகிறது. இந்த நடுநிசியில், என் நெஞ்சம் நடுக்குறுகிறது, எண்ணம் ஈட்டியாகிவிடுகிறது — எரிதழல், தெரிகிறது—தியாகியின் உடல் அதிலே கிடப்பது தெரிகிறது: ஓர் கேலிச் சிரிப்பொலிகூடக் கேட்கிறது — ஓஹோ! நீ விடுதலைப்படை வரிசையில் உள்ளவனல்லவா? உரிமை முழக்கமிட்டுக்கொண்டு ஊரூரும் அலைபவனல்லவா? தமிழர், தமிழர் என்று மார்தட்டித்தட்டிப் பேசுபவனல்லவா? அகம் என்பாய், புறம் என்பாய், ஆற்றல் என்று கூறுவாய், என் ஆன்றோர், சான்றோர் என்று புகழ்பாடுவாய், அல்லவா? என்று கேட்டுவிட்டுக் கேலிச் சிரிப்பொலி கிளப்பி என்னை வாட்டி வதைக்கிறது, நான் மனக்கண்ணால் காணும் அந்தக் காட்சி. இந்த நடுநிசியில், என்போல் இதுபற்றி எண்ணி எண்ணி நெஞ்சு புண்ணாகிக்கிடப்போர் எண்ணற்றவர்கள என்பதும் தெரிகிறது. ஆனால் எனக்குத் துக்கம் மட்டுமல்ல; வெட்கம் என்றேன்! உண்மையிலேயே நான் வெட்கப்படுகிறேன்! — ஏனெனில் இத்தகைய வீரத்தியாக உள்ளம் கொள்ளமுடியுமா உன்னால் என்று எவரேனும் என்னைக் கேட்டுவிட்டால், நானென்ன பதில் அளிக்க முடியும்! தலையைக் கவிழ்த்துக் கொள்ளத்தான் வேண்டும் — பல கோடி மாந்தரில் ஒருவருக்கு மட்டுமே கிட்டக்கூடியது அந்த வீரத்தியாக உள்ளம், விருதுநகர் சங்கரலிங்கனார், அதனைப் பெற்றிருந்தார். பேதை நான், அதனை உணர்ந்துகொள்ளும் ஆற்றலும் பெற்றேனில்லை! அவர் இறந்துபடுவார் என்று எனக்கு எண்ணவே இயலாது போயிற்று. அவரை நான் கண்டேன், எனினும், அவர் இறந்துபட நேரிடும் என்று எண்ணவில்லை—காரணம்,நானோர் ஏமாளி, நாடு அவரை அந்நிலை செல்லவிடாது, நாடாள்வோர் அவரைக் கைவிடமாட்டார்கள். அந்த அளவு கேவலத் தன்மை நாட்டைப் பிடித்துக்கொண்டில்லை, அவர் கடைசிக் கட்டம் செல்லும் வரையில்கூடக் கன்னெஞ்சம் கொண்டிருப்பர், பிறகோ, பழிபாவத்துக்கு அஞ்சியேனும், பிற்காலத்துக்குப் பயந்தேனும், அறிவுலகம் ஏசுமே என்று எண்ணியேனும், அவர் 'சாவதைத்' தவிர்த்துவிடுவதற்கான தக்க முறையினை மேற்கொள்வர், என்று என் பேதை நெஞ்சு எண்ணிற்று! பெருநெருப்புக் கிளம்பிற்று, அந்தோ! அந்த வீரத்தியாகியை அணைத்துக்கொண்டது — சங்கரலிங்கனார் நம்மைவிட்டுப் பிரிந்தார்.

எனக்கு, அவரை, இதற்கு முன் தெரியாது — நாடு அவர் புகழ் பாடிட அவர், 'நடுநாயகமாக' இருந்திடவில்லை — எனினும் இன்று நடுநாயகங்களாகிவிட்ட பலருக்கு அவர் போன்றாரின் ஆற்றல்மிக்க தேசத்தொண்டு பயனபட்டு வந்திருக்கிறது; நீண்டகாலமாகக் காங்கிரசில் பணியாற்றியவர், காமராஜர் கதர் அணியக் கிளம்பு முன்பே, கைராட்டையில் நூல் நூற்றவர்; காந்தியார், மகாத்மா ஆகிக்கொண்டிருக்கும்போது, உடனிருந்து அந்த உயர்வு உருவாவது கண்டு உளமகிழ்ந்தவர்; வந்தேமாதரம், தேர்தல் தந்திரமானபிறகு அல்ல, அஃது தேசிய மாமந்திரமாக இருந்த காலத்திலேயே, அந்தக் குறளைக் கற்றுக் களித்தவர், 'சிறை சென்று நலிந்தவர்' வணிகத் துறையிலும் அவருக்கு வெற்றிதான்; சங்கரலிங்கனார், பழம் பெரும் தேசபக்தர் வரிசையைச் சேர்ந்தவர்.

இன்றைய நிதி மந்திரிகளுக்கும் சோப்புச் சீமான்களுக்கும், அவரைத் தெரிந்திருக்க முடியாது.

மாணிக்கவேலர்கள், அவர்பற்றிக் கேள்விப்பட்டிருக்க முடியாது.

(15-ம் பக்கம் பார்க்க)

சுயேச்சை ஆகிவிடுவேன்....!

காட்சி 1

இடம்:- புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் தோட்ட வீடு.

இருப்போர்:-கனகசபாபதிச் செட்டியார் அவர் மனைவி, நீலாம்பிகை. அவர் குமாரி பானு, வேலைக்காரன் சுடலைமுத்து.

நிலைமை:- [தோட்ட வீடு முன்புற ஹாலில், தேசீயத் தலைவர்களின் படங்களை இடம் பார்த்து, வேலைக்காரன் மாட்டிக்கொண்டிருக்கிருன். சோபாவில் சாய்ந்தபடி, கனகசபாபதி செட்டியார் வேலைக்காரனுக்கு யோசனை கூறுகிருர்.

கனக:- டே! டே! முட்டாள்! நேரு படத்துக்கும் ராஜேந்திரபிரசாத் படத்துக்கும் நடுவே ராஜாஜி படத்தை மாட்டறியே..... மடையா! அதை எடுத்துவிட்டு, அங்கே, காமராஜ் படத்தைத் தொங்கவிடுடா ... துளியாவது ஞானம்இருநதாத் தானே...

நீலா:- அவன் எங்கே போவானும் அந்த ஞானத்துக்கெல்லாம... உங்களுக்கு வந்திருக்குது ஆயிரம் ஆயிரமாச் செலவு செய்து.... அவனுக்கும் எனக்கும் எங்கே இருந்து அந்த ஞானம் வரப் போகுது.

கனக:- உனக்கு ஏண்டி இப்படி பொத்துகிட்டு வருது.

பானு:- அம்மா! அம்மா! ஞானம், போட்டுகிட்டு இருக்கிறதுமாதிரி சாடின் கவுனும் வெள்ளைக்காரத் தொப்பியும் எனக்கு வேணும்மா ...அபபாகிட்டே சொல்லி வாங்கித்தரச் சொல்லம்மா...

நீலா:- நீ, சும்மா இருடி கண்ணு! நான் வாங்கித்தாரேன்... உஙக

அண்ணுதுரை

அப்பாவுக்கு இப்ப அதை எல்லாம் கவனிக்க நேரம் கிடையாது.

[ஆணி அடிக்கும் சத்தம் பலமாகக் கேட்கிறது.]

இதோ, இப்படி கட்டின வீட்டை, கண்டபடி ஓட்டையாக்கிக் கொண்டிருக்கத்தான் நேரம் சரியாயிருக்குதே... உன்னையும் என்னையும கவனிகக நேரம் எப்படிக் கிடைக்கும்...

வேலை:- இந்தப் படத்தை எங்கே, தொஙகவிடணும...

கனக:- [பானுவை அருகே அழைத்து முகத்தைத் துடைத்துக்கொண்டே] எந்தப் படத்தை...?

வேலை:- கருப்புக் கண்ணாடி போட்டுகிட்டு இருக்காரே...

கனக:- ராஜாஜி படமா...? அதை... வந்து...

நீலா:- ஆமாம், எங்களுக்கு ஒண்ணுமே தெரியாதுன்னே இருக்கட்டும்... இப்ப, ராஜாஜி படத்தை அவன், சரியான இடம் பார்த்துத்தானே மாட்டி வைச்சான், நேரு படத்துக்கும ராஜேந்திரபிரசாத் படத்துக்கும் நடுவிலே...

கனக:- அப்படியாடி, வரிசை இருக்கறது... அசடு...

நீலா:- முந்தி, நீங்களே, அப்படித்தான் மாட்டிவைக்கச் சொன்னிங்க... முந்தி இருந்ததே ஒரு முசுடு, முருகையன், அவனண்டை... கவனமிருக்குதே, நல்லா...

கனக:- யார் இல்லே என்கிறு... நீலா! அப்போது ராஜகோபாலச்சாரியார் முதல் மந்திரியா இருந்



தாரு... அதனாலே நேரு படத்துக்குப் பக்கத்திலே அதை மாட்டி வைக்கச் சொன்னேன்... இப்ப காமராஜ் முதல் மந்திரி... அதனாலே, நேருவுக்குப் பக்கத்திலே, அவர் படம் இருக்க வேணும்... அதுதானே முறை.

வேலை:- எனக்கென்னங்க தெரியும், அந்த முறை எல்லாம். நீங்க முன்னே எல்லாம் ராஜகோபாலாச்சாரி பெரிய ஞானி, மகாத்மாவோட சம்பந்தி, நேருவுக்குச் சமமானவரு என்றெல்லாம் சொல்லுவிங்க...

நீலா:- (கிண்டலாக) அது, அப்படா சுடலை, அவரு மந்திரியா இருந்த போது...இப்போ, அவருக்கு இடம் வேறே... ஐயாவோட நியாயம்டாப்பா அது...

வேலை:- கறவை இருக்கிற வரைக்கும் தொழுவத்திலே கட்டிவைக்கறது—கறவை நின்னுப்போனா கிராமத்துக்குத் துரத்திப்போடறுங்களே, பசுவை, அது போலிருக்குது...

பானு:- அம்மா! ஞானம் வீட்டிலே புதுசா பசுமாடு வாங்கி வந்திருக்காங்கம்மா......அம்மா! ஞானத் தோட கவுன், பச்சைக்கலர்...

வேலை:- இடம் சொல்லுங்க...

கனக:- அதைத் தாண்டா யோசிக்கறேன்...ஆ! அதுதான் சரி... டே! சுடலை! அதோ பாருடா, அந்தப் பக்கத்திலே...இராமர் படம் இருக்குதே...

வேலை:- ஆமாங்க...அந்தப் பக்கத்திலே இடம் இல்லிங்களே...

கனக:- சொல்றதைக்கேளேண்டா ...இராமர் படத்துக்குப் பக்கத்திலே......அனுமார் படம் இருக்கேல்லோ...

வேலை:- அதைஎடுத்தூட்டு அந்த இடத்திலே இதை மாட்டிடட்டுமா...

கனா:- (கோபமாக) ஏண்டா, இப்படி முந்திரிக்கொட்டை மாதிரி இருக்கே...நான் என்ன சொல்கிறேன்னு நிதானமாக, கவனமாகக் கேளேன, பொறுமையோட...

நீலா:- சொல்றதை, நீங்கதான் சுருக்காகச் சொல்லுங்களேன்... பொழுது பூரா நீங்களே அவனை இங்கே வேலை வாங்கிகிட்டு இருந்தா, மத்த வேலையை யார் செய்வாங்களாம்....ஏண்டாப்பா! சுடலை! தோட்டத்துக்கு தொரசாமி தண்ணி பாய்ச்சியாச்சான்னு பார்த்தாச்சா...

வேலை:- ஐயா, விட்டாத்தானே...

நீலா:- தோட்டத்திலே சிமிண்டு பெஞ்சியிலே போட்டுக்கிடந்த தலையணையை எடுத்து வந்தாச்சா...

வேலை:- அது, விடியக்காலையே கொண்டுவந்தாச்சிங்க...

நீலா:- என்னோட கொண்டை ஊசி, அங்கு இருந்துதா...?

பானு:- (சிரித்தபடி) இருந்துது... எனக்குக் கிடைச்சுது......நான் கொடுக்கமாட்டேன்...

கனக:- (கொஞ்சுதலாக) உனக்கு எங்கேம்மா அது கிடைச்சுது.

பானு:- எங்கே கிடைச்சுது தெரியுமா...

நீலா:- (கோபமும் கேலியுமாக) எங்கே கிடைச்சுது, தெரியுமான்னு ஏண்டி முழநீளம் நீட்டிக்கிட்டு இருக்கறே...புல்தரையிலே விழுந்து கிடந்திருக்கும்...

கனக:- அதுக்கு ஏன் நீலு! குழந்தையிடம் சிடுசிடுன்னு பேசறே...

நீலா:- நான் சிடுசிடுன்னு பேசறவ ...நீங்க கொஞ்சுவிங்க... கொழந்தெ, ஒரு கவுன் வேணும்னு நாலு நாளா கெஞ்சுது, அதை வாங்கிக்கொடுக்க வழியில்லை.......வாய் மட்டும் வாழைப்பழம்தான்...

பானு:- அம்மா! அம்மா! வாழைப் பழத் தோலிலேதான் ஒட்டிக்கிட்டு இருந்துது கொண்டை ஊசி...

கனக:- வாழைப்பழத் தோலா...... ஏது வாழைப் பழம்...

வேலை:- செவ்வாழைங்க......அம்மா கொடுத்தாங்க....தோலைக் கீழே போட்டுவிட்டேன்...

பானு:- எனக்கு ஏம்மா செவ் வாழைப்பழம் கொடுக்கல்லே...

கனக:- நான் கேட்டபோது கூட, பழம் கெட்டுப்போச்சுதுன்னு சொன்னயே...

நீலு:- (சலிப்புடன்)-அதனாலேதான் உங்களுக்கும் கொடுக்கலே, கொழந்தைக்கும் கொடுக்கலே...

வேலை:- பழம் நல்லாத்தானே இருந்துது...

நீலு:- உனக்கு எல்லாம் நல்லாத்தான் இருக்கும்......வேலையைப் பாருடா.

கனக:- டேய்! அனுமார் படத்தை, எடுத்துவிட்டு, ராஜாஜி படத்தை அங்கே மாட்டு...

வேலை:- அனுமார் படம்...?

கனக:- அதோ அவகிட்டகொடு... எங்கேயாவது பார்த்து மாட்டி வைப்பா......,...பொருத்தமான இடம் பார்த்து...

நீலா:- உங்க ஆபிஸ் ரூமிலேதான் மாட்டணும்...வெள்ளக்காரிச்சிங்க படத்தை எடுத்துப் போட்டு...

பானு:- வெள்ளைக்காரிகள் போட்டுக் கொள்ற மாதிரி கவுனும் தொப்பியும்தாம்பா வேணும்...

கனக:- நாலுநாள் போகட்டும்மா, வாங்கித் தர்ரேன்...

வேலை:- வேலை தீர்ந்துதுங்க...

கனக:- சரி, போயி, வேட்டியைத் துவைத்துப்போடு...

நீலா:- வேட்டி துவைக்கச்சொல்லி, நான், அவ இருக்காளே குலுக்கு நடை குள்ளம்மா அவளை அனுப்பியாச்சி......நீ போயி...மத்த வேலையைப் பாரு ...

பானு:- ஞானம் வீட்டுக்குப் போயி, கவுனும் தொப்பியும் வாங்கி வரச் சொல்லி, அப்பாவுக்குக் காட்டம்மா...

நீலா:- போடா...போய் வாங்கிவா...

கனக:- பானு! நாலு நாள் போகட்டும்...கட்டாயம் வாங்கித் தருகிறேன்...

நீலா:- இதுக்கு எதுக்காக நாலு நாளும் ஐஞ்சு நாளும்...

கனக:- (சிறிது கோபமாக) இங்கே இன்னைக்கு, பெரிய காங்கிரஸ் தலைவர்களெல்லாம் வரப் போறாங்க...எலக்ஷன் விஷயமா...என்னோட அபிப்பிராயம் கேட்க...நாலு நாள் தங்கி, கமிட்டி நடத்துவாங்க போலிருக்கு...அவங்க எதிரே வெள்ளைக்கார கவுனும் தொப்பியும்

போட்டுகிட்டு இருந்தா, அவங்களுக்குக் கசப்பா இருக்காதா, அருவருப்பா தோணுதா...

நீலா:- நீங்க போட்டுக்கொள்ள வேணும், கொழுந்தை போட்டு கிட்டா, உங்களுக்கு என்ன... அவங்களுக்குத்தான் என்ன வாம்...

பானு:- ஞானத்தோட அப்பா கூடத்தான் காங்கிரசு...

நீலா:- சொல்லு, சொல்லு...என்னமோ ஒரே அடியா, தேச பக்தர் ஆயிடணும் என்று பார்க்கிருரு...

கனக:- நீலா! நீ என்ன சின்னப் பொண்ணு' இப்ப எந்த விதமான திட்டம் போட்டு வேலை செய்து கொண்டிருக்கிறேன்... உனக்குத் தெரியாததில்லே... காலத்துக்குத் தகுந்தபடி நடந்து காரியத்தைச் சாதித்துக்கொள்ள வேண்டாமா?

நீலா:- அது என்ன காரியமோ! காலமோ! எனக்கென்ன புரியுது. நான் போயி, வேலையைப் பார்க்கறேன்...இப்பவே சொல்லி விடுங்க...எத்தனை பேர் வந்து தொலைப்பாங்க, சாப்பாட்டுக்கு ...என்னென்ன செய்ய வேணும் ...

கன:- அப்படிக் கேளு...உன்னுடை ஜாதக பலத்தாலேதானே, நீலா நான் இவ்வளவு சம்பத்தும் அந்தஸ்தும் பெற்றது.

நீலா:- போதுமே, முகஸ்துதி...... விஷயம் சொல்லுங்க...

கனக:- ஐயரை வரச்சொல்லி இருக்கறேன்.......விருந்துக்காக என்னென்ன தேவையோ அதை அவர் கவனிச்சிக்கொள்வாரு... நீ மட்டும், இலட்சுமிகரமா இரு ...பந்தி விசாரிக்கக்கூட, ஐயர் ஆட்களே வாராங்க...நீ உபசாரத்துக்கு, நெய் மட்டும் வட்டிச்சாப் போதும்...

நீலா-- சைவச் சாப்பாடுதானே...

கன:- (சிரித்தபடி) பெரிய கிண்டல் காரி நீலா, நீ! ஐயர் வராருன்னு சொன்ன பிறகு சைவச் சாப்பாடான்னு கேட்டு வைக்கறியே ...

நீலா:- கோழிப்புலவு செய்யறது யாராம் நம்ம வீட்டிலே. கோபாலய்யரில்லையா...

கன:- (நீலாவின் கன்னத்தில் அடித்தபடி கொஞ்சும் குரலில்) போக்கிரி! கோபாலய்யர்போலவே தானு எல்லா ஐயர்களும் இருப்பார்கள்...

நீலா:- ஆமா...ஐவர்லால் பார்ப்பார ஜாதிதானே...

கன:- ஆமாம்...காஷ்மீர் நாட்டு பிராமணர்...

நீலா:- அவரு சாப்பிடுவாராமே...

கன:- செச்சே! இருக்காது, இருக்காது...

நீலா:- நீங்க ஒண்ணு...லேடி டாக்டர் இல்லே இலட்சுமி பாய், அவ சொல்லிருக்கா எனக்கு...

கன:- என்னமோ, யார் கண்டது... இப்ப, நம்ம வீட்டு விருந்து, வடை பாயாசத்தோடுதான்...

நீலா:- மந்திரிங்க, யாராச்சும் வருவாங்களா?

கன:- மந்திரிகளைவிடப் பெரியவங்கன்னு சொல்லவேணும்...... இவங்க பார்த்து யாரைச்சிபார்சு செய்திருங்களோ, அவங்களைத்தான் எலக்ஷனிலே நிறுத்து வாங்க...

நீலா:- எலக்ஷனிலே நிறுத்து வாங்க...பணம் செலவழிக்கறது யாராம்...?

கன:- பகவான் இருக்கார் போ, நீலா! அவரைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறேன்.

நீலா:- ஏனுங்க, அப்படிங்களா...

கன:- பிரகாசம், மனுபோட்டானும் ......அவன், பிச்சைக்காரப்பய, எலக்ஷன் செலவுக்குக் காசு ஏது, என்று கூறிவிட்டாங்க... அதற்குப் பிறகுதான், நம்மிடம் வருவதுன்னு, முடிவு செய்தாங்க...நம்மைவிட்டா, வேறே ஆள் யாரு, கிடைப்பாங்க...

நீலா:- நீங்க, சாமான்யப்பட்டவரா! எல்லா ஏற்பாடும் செய்து வைத் திருப்பிங்களே,

(நாலைந்து பேர்களுடன் சமயல் ஐயர் வருகிருர்.)

கன:- வாங்க சாமி, வாங்க...

சமயல் ஐயர்:- கனகசபாபதி! ஆத்திலே விசேஷம் வரச்சொன்னுர்னு வந்து சொன்னு, அத்திப்பட்டு முத்தய்யன் வீட்டிலே ஒரு விசேஷம்...நான்தான் வந்தாகணும்னு ஒரே பிடிவாதம் பிடிச்சா — போங்கடா, போங்க, கனகசபாபதியோட சினேகிதம் நேக்கு, இன்னக்கி நேத்து ஏற்பட்டதா; அந்த நாளிலே கனகசபாபதி கை வண்டியிலே துணி மணி போட்டுண்டு தெருத் தெருவா விற்ற நாளிலே இருந்தல்லவா சினேகிதம் — இப்ப அந்த இடத்து விசேஷத்துக்குப் போகத் தவறலாமா, அத்திப்பட்டா இருந்தா என்ன ஆலம்பட்டா இருந்தா என்னன்னு சொல்லிவிட்டு, அத்திப்பட்டுக்கு நம்மோட மச்சினன் இருக்கானேல்லோ இட்டு, அவனை அனுப்பிச்சிட்டு, ஓடோடி வந்தேன்...சரி...சொல்லுங்க...என்ன விசேஷம்...எத்தனைபேர் வருவா...என்னென்ன அயிட்டம்...

கன:- அயிட்டமெல்லாம் நீங்கதான், சாமி சொல்ல வேணும்... விருந்து ஒரு பதினைந்து பேர்...

பானு:- அம்மா, அம்மா, ஞானத்தோட அப்பா கூட எலக்ஷன்லே நிற்கப்போறுராம், ஞானம சொன்னு...

மிஞ்சினு ஒரு இருபது பேர் இருக்கும்... காங்கிரஸ் கமிட்டிகூடுது, நம்மவீட்டிலே.

ஐயர்:- காங்கிரஸ் கூட்டமா... சரி அப்ப,

சுமாரா இருக்கலாமேன்னே, ஒரு கூட்டு, ஒரு பொரியல், வறுவல் கூட இருக்கலாம்.

கன:- இல்லிங்க, கொஞ்சம் தரமா இருக்கணும்...வருகிறவங்க, மாகாணத்திலே ரொம்ப முக்கிய மானவா...

ஐயர்:- இராஜாஜி கிடையாதாமே, இந்தக் கமிட்டியிலே] எல்லாம்... சர்வம் காமராஜ் மயம் ஜகத்னு பேசிக்கொள்ரு...நேக்கு என்ன தெரியறது......ஆமா, நாடார் அவா, வாராரோ...

கனக;- இல்லே...உமக்கு காமராஜரைத் தெரியுமோ...

ஐயர்:- என்ன அப்படிக் கேட்டுட்டேள்......காமராஜ் இப்ப முதல் மந்திரி......அந்தஸ்த்து, அயிஸ்வரியம் எல்லாம், இராமானுக்கிரஹத்தாலே கிடைச்சிருக்கு... நேக்கு காமராஜ், காசு இல்லாமே பதவி இல்லாமே, இருந்தகாலத்திலேயே தெரியுமே......வத்தலகுண்டு மகாநாட்டுக்கு நான்தானே, சமயல்...

கனக:- அப்படிங்களா.......செலவு விஷயமாக் கணக்குப்பிள்ளையைப் பாருங்க...

ஐயர்:- சொல்லி இருக்கேளோ... ஏன்னு, உம்மோட கணக்குப் பிள்ளை, ஒரு மாதிரி...சூனுமானு ......

கனக:- இருக்காதுங்களே.....முகத்திலே சந்தனப் பொட்டு வைத்துக்கொண்டு, சிவப்பழமா இருப்பானே...

ஐயர்:- அது வேஷம்...பேச்சு பூரா, விஷம்....கிடக்கட்டும்.....லோகம் பூரா கெட்டுண்டு வர்ரது...... அப்ப, நான் போய் காரியத்தைக் கவனிக்கிறேன்...

கனக:- பிரமாதம்னு சொல்ல வேணும், சாமி, ஏன்னு, உங்களிடம் சொல்லி வைக்கிறதிலே, தப்பு என்ன, கமிட்டி, எலக்‌ஷன் விஷயமாகக் கூடுது...நம்மைத் தான் எம். எல். ஏ-க்கு நிறுத்த யோசனை...

ஐயர்:- அட ராமா! இதையன்னு, நேக்கு முதல்லே சொல்லியிருக்கோணும்...எலக்‌ஷனுக்கு ஆள் எடுக்கற, கமிட்டியா? அதற்கு, விருந்துன்னு, கனக சபாபதி! சாதாரணமா இருக்கப்படாதே ...96 வகை...இருக்கவேணும்...

கனக:- 96-வகையா...

ஐயர்:- அதுக்குள்ளே மலைத்துவிட்டீரா, இஞ்சி பச்சடி எலுமிச்சம் ஊறுகாய், வடுமாங்காய், கொத்தமல்லித் துகையல், தேங்காய்ச் சட்னி, மாங்காய் தித்திப்பு, இப்படி......எல்லாம் சேர்ந்து 96...

கனக:- உங்களுக்குச் சொல்ல வேணுமா...என்னமோ சாமி, இந்தக் கமிட்டி எத்தனையோ ஊருக்குப் போகுது...கனகசபாபதி வீட்டு விருந்து போலே வேறே எங்கேயும் நாங்க சாப்பிட்டதில்லேன்னு அவா சந்தோஷப்படவேணும், அவ்வளவுதான்...

ஐயர்:- அதை எல்லாம் நான் பார்த்துக் கொள்றேன்...டேய்! அம்பி! புறப்படுங்கோ...

[கனகசபாபதியும் மோட்டார் ஏறிக்கொண்டு வெளியே செல்கிருர்]

காட்சி 2

இடம்:- ஒரு சிறு ஓடுவீடு, கூடம்

இருப்போர்:- கதர் ஸ்டோர் கோபாலன்
கம்பவுண்டர் காளி
உப்பு. உத்தண்டன்.

நிலைமை:- [மூவரும், கூடத்தில் ஒரு பழைய பாய்மீது உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிருர்கள். உப்பு உத்தண்டன் மட்டும் சிறிது கோபமாக இருக்கிருன். மற்ற இருவரும், மந்தகாசமாகவே உள்ளனர்.]

காளி:- எந்தெந்த வியாதிக்கு என்னென்ன மாதிரியான மருந்து கொடுக்கவேணும் என்று தெரிந்து செய்யவேணும், உப்பு! சும்மா வந்தேமாதரம் போட்டு விட்டால் தீர்ந்ததா?

கோ:- உத்தண்டனுக்கு, வேலைக்குத் தகுந்தபடி வேஷம் போடுவது பிடிக்காது... ஆனு ஒரு மணி நேரம், நம்ம கதர் ஸ்டோரிலே உட்கார்ந்து பார்த்தா தெரியும், வேலைக்குத் தகுந்தபடி வேஷம் போடுவதிலே, யாரார் முந்திக்கொள்கிருர்கள் என்பது.

உத்:- உப்பு சத்யாக்கிரகத்தின் போது, காளீ! நான் எடுத்துக் கொண்ட சபதம் என்ன தெரியுமா... ஒரு போதும், இந்த தேசத்தை, சுயநலக்காரர்கள், சுரண்டிப் பிழைப்போர் ஆளவிடக் கூடாது என்பதாகும்...

காளி:- சபதத்தை, நாங்கள் குறை சொல்கிருேமா? சமய சந்தர்ப்பம் பார்த்து முறையைமாத்தவேண்டும் என்கிருேம், வேறென்ன...

உத்:- பசிக்குப் பனம் பழம் தின்பது என்கிருய், கோபால்! நான் புலி பசித்தாலும் புல்லைத் தின்னுது, என்கிறேன்...

காளி:- நான் சொல்வது ஒட்டைச் சட்டியாளுலும் கொழுக்கட்டை வேக வேண்டும் என்பது... தெரியுதா?

உத்:- பிச்சை எடுத்ததாம் பெருமாள்—அத்தைப் பிடுங்கிச்சாம் அனுமார் என்பார்கள், அது போல, கரையான் புத்துவைக்க நல்ல பாம்பு குடி புகுந்தது என்பார்களே அதுபோல, அடிபட்டு உதைபட்டு, சுயராஜ்யம் பெற்றுவிட்டு, இப்போது கனகசபாபதியோடகாலில்விழுந்துஎம்.எல்.ஏ.

யாக நிற்கணும்னு கேட்கிறது என்ரு, மனசு கேட்குமா...காளி! நிஜமாச் சொல்லு, உனக்கே, வெட்கமா இல்லையா...

காளி:- உத்தண்டா! நீ எப்பவும் இப்படித்தான்... நிலைமைக்கு ஏற்றபடி நடந்துகொள்ளத் தெரியறது இல்லே.

உத்:- ஆமாம்பா... உப்புச் சத்யாக்கிரகத்தை அடக்க, இன்றைக்கு மலபார் போலீசு வருது, இன்றைக்கு மட்டும், அதிலே/கலந்து

கொள்ளக்கூடாதுன்னுசொல்லி அந்தக் காலத்திலேயே நீ நிலைமைக்கு ஏற்றபடி நடந்து கொண்டவனுச்சே...

காளி:- இதோ பாரு, உப்பு! இப்ப, இந்த கழகத்தானுங்க, கச்சையை வரிந்து கட்டிகிட்டு புறப்பட்டு இருக்கானுங்க... காசாலேதானே அவனுங்களை அடிச்சி வீழ்த்தணும்...கனக சபாபதியோட காசு, நமக்கு ஆயுதம்.

உப்பு:- நாம இப்படிப் பேசித் திருப்திப்படவேண்டியதுதான்... அந்த கனகசபாபதி சொல்லிக் கொள்ளுவாரு, இந்தப் பயல்களோட ஏமாளித்தனத்தை நான் பயன் படுத்திக்கொண்டேன், என்று...

[மோடார் சத்தம் கேட்கிறது. காளியும் கோபாலனும் வெளியே சென்று பார்க்கிறார்கள். கனக சபாபதி இறங்கி உள்ளே வருகிறார்.]

காளி:- உத்தண்டா... உள்ளே நாற்காலி இருக்கா...வாங்க...வாங்க.

கனக:- நாற்காலி எதுக்காம்? நாம என்ன வெள்ளைக்கார தேசத்தவனுங்களா...மங்களகரமா, பாய் மீதே உட்காரலாம்...

[உட்காருகிறார்]

என்ன? எல்லாம் கூடி முதல் கமிட்டி நடத்தினிங்க போலிருக்குது... ஆமா... வரப்போற கமிட்டியிலே என்ன இருக்குது ... எல்லாம் இங்கே நீங்க பார்த்துச் செய்கிற முடிவைப் பொறுத்து இருக்குது... உத்தண்டன் வார்த்தைக்கு மறு வார்த்தை சொல்ற ஆசாமி யாரு இருக்க முடியும் அந்தக் கமிட்டியிலே. மூன்று பேரும், விருந்துக்கு வந்துவிடணும்... அதுக்கு அழைத்துவிட்டுப் போகத்தான் வந்தேன்... கமிட்டி கிடக்குது... அது எந்த முடிவு செய்தா என்ன... காங்கிரசு ஜெயக்கொடி நாட்டணும்... கழகத்தானுங்க ரொம்ப சுறுசுறுப்பா இருக்கறுங்க... பணம் நிறைய செலவழிக்கணும்... நாள் தவருமே, பாட்டு, கூத்து, படக்காட்சி, காலட்சேபம், கூட்டம், எல்லாம் நடத்தணும்... இன்றைக்கு இராத்திரிகூட, கோலப்பன் கோயில் மைதானத்திலே கூட்டம் இருக்கு... தம்பி! கூட்டத்திலே ஒரு சின்னக் குட்டி, பதினெட்டு பதினறு இருக்கும் வயசு, நம்ம ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி ஆடப் போவுது... ஏற்பாடு செய்திருக்குது... அந்தக் குட்டிக்கு ஏகப்பட்ட கிராக்கியாம்... சிபார்சு பிடிச்சிகொண்டு வந்திருக்குது... எல்லோரும் வாங்க... கமிட்டிக் காரரிடம் தம்பிகளா! ஒத்துமையான கருத்தைச் சொல்லுங்க... வரட்டுமா... காளி, வர மறந்து விடாதே... உத்தண்டா, வரட்டுமா, கோபாலு, நமஸ்காரம்.

[விடை பெற்றுக்கொண்டு செல்கிறார்.]

காளி:- ரொம்ப மும்முரமாத்தான் இருக்காரு கனகசாபதி...

கோ:- அவர் எப்போதுமே அப்படித்தான்... நினைத்ததை முடிக்கிறவரு...

உத்:- அப்படித்தான் இருப்பார். நம்மைப்போல, பாடுபட்டுத் தேடியதைப் பாழ் கிணத்திலேயா போடுவாங்க...

* * *

காட்சி 3

இடம்:- கனகசபாபதி வீட்டு-கூடம்

இருப்போர்:-கனகசபாபதி, விருந்தினர்

நிலைமை:— சமையல் ஐயர் மேற்பார்வையில்விருந்துநடைபெறுகிறது...

கன:- காளி! கூச்சப்படக் கூடாது ...உன் வீடுபோல...சாமி! சாமியோய்...அதோ அந்தஇலையைக் கவனியுங்கோ...

சமயல் ஐயர்:- சாம்பார்...சாம்பார்... டேய்! அம்பி! அதோடு பிள்ளைவாள் இலையிலே அப்பளம்போடு ...நிதானமாச் சாப்பிடுங்கோ... செட்டியார்வாள்! நீங்களும் உட்காரலாமே...பந்தியை நான் கவனித்துக்கொள்கிறேன்...

கன:- வேண்டாம்ங்க,,...நானே, இட்ட இருந்து உபசாரம் செய்தாத்தான்,எனக்கு...ஆனந்தம். வடை தீர்ந்துபோச்சிங்களா... மைசூர்பாகு மிச்சமாயிடுத்தா...

ஒருவர்:- ஐயர்...ஐயரவாள் தக்காளி சூப், ரொம்ப ஜோர்...

சமய:- இன்னும் ஒரு தொன்னை சாப்பிடுங்கோ...

வேறு ஒருவர்:- என்ன ஐயரே! நம்ம முருங்கப்பட்டியாரை இவ்வளவு கேவலப் படுத்திவிட்டீரே... அவர் என்ன தொன்னையையா சாப்பிடுகிறவர்...

[பலர் அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறார்கள்]

சமய:- ரொம்ப ஹாஸ்யமாப் பேசறீள்...ஹி...ஹி...

கன:- மோர் வரட்டும், சாமி, மோர் வரட்டும்...

சம:- என்ன செட்டியார்வாள்... மோர்னு சொல்றீர், கட்டித் தயிர்...தெரியறதோ...அடே



அம்பி! தயிர் கொண்டுவா... இவாதான், கமிட்டித் தலைவரோ ...சந்தோஷம்...எங்கோ பார்த்த முகமா இருக்கு...

கன:- இவர்தான் ஈச்சம்பாடி பேச்சு முத்து...பிரக்யாதியான குடும்ப மாச்சே...

சமய:- இப்ப, கவனம் வர்ரது. நம்ம இதபாஷிணியோட அரங்கேத்த விசேஷத்திலே பார்த்தது...

பேச்:- கவனமிருக்கே....நன்னு.... போதும் தயிர் ஆகறதில்லை நமக்கு...ஒரு நெல்லிக்காய் போடும்.

சம:- பாருங்கோ, தெரிந்தவாளுக்குத்தான் தெரியும்...நெல்லிக்கா ஊறுகா கேட்டார் பாருங்கோ, பரிபூரணமான ஞானம் இருக்குன்னு அர்த்தம்...

ஒரு குரல்:- சட்னி—சட்னி.

மற்:- உருளைக் கிழங்கு கூட்டு, கொண்டுவா...

இன்:- ஒரு அப்பளம் போடய்யா, பார்ப்போம்...

சம:- பார்க்கறதென்ன? திவ்யமாச் சாப்பிடுங்கோ.........இது என்ன அப்பளம் தெரியுமோ? திருநெல்வேலி அப்பளமாக்கும் ......

[விருந்து முடிகிறது கனக சபாபதி பேச்சு முத்துவிடம்]

கன:- சந்தனம் பூசுங்கோ...சிரங்கம் சந்தனம் தானுங்க...அத்தர் சேர்த்திருக்கு...இந்தாங்க, அசோகா...

பேச்:- வெற்றிலை எந்தப் பக்கத்திலே இருந்து கிடைக்குதுங்க ......'

கன:- வாழாவூர் வெத்திலைங்க...

ஒருவ:- கொடிக்காலிலே என்னமோ பூச்சி நாசம் செய்யுதுன்னு புகளூர் வேலாயுதம் பாளையம் பக்கம் புகார்வந்துதே, என்ன ஆச்சிங்க...?

பேச்:- சும்மா, எதிர்க்கட்சிக்காரரு கிளப்பிவிடுற புகார்தானே...

வேறு ஒரு:- இல்லிங்க...நான் அந்தப் பக்கம்தானே...பெரிய நாசம் தானுங்க...பூச்சியோட தொல்லை ......

பேச்:- ஏன்யா, பூச்சி புழு இதுகளை எல்லாம் கூட காங்கிரஸ்தான் கவனிச்சிக்கொள்ளணுமா...

சமய:- நல்லா சொன்னேள் செட்டியார்வாள்! வாங்கோ! ஒரு விளாங்காயளவாவது சாப்பிட்டு விட்டு, வந்துடுங்கோ...

சன:- இருக்கட்டும், சாமி, கமிட்டி இப்பவே நடத்திப்போடலாமுங்களா...

பேச்:- கமிட்டியா...இப்பவா......சரியாப் போச்சுப் போய்யா...நீதான் பலமான விருந்துபோட்டு, மயக்கம் வரும்படியாச்செய்துவிட்டே...படுத்து ஒருமணிநேரம் புரண்டு எழுந்தாத்தான், மூளையே வேலைசெய்யும்...

பலர்:- ஆமாமாம்...

கன:- டே! சுடலை! தொரசாமி! குள்ளி! குப்பா!...பயல்களெல்லாம் எங்கே...

ஒருவர்:- தொழிலாளர் மகாநாடு போடப்போயிருப்பானுங்க...

[பலரும் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டே படுக்க, மாடி செல்கிறார்கள்.]

(அடுத்த இதழில் முடியும்)

கண்டிக்கக் கிளம்பும் 'கனம்கள்'

தாங்கமுடியாத தொல்லையால், கிளர்ச்சிகள் துவக்கப்படும் போதெல்லாம், 'கனம்கள்' கண்டிக்கக் கிளம்புகிறார்கள்; காரசாரமாகக் கூடக் கண்டிக்கிறார்கள்! யார் தூண்டிவிட்டார்கள், எவருடைய துர்போதனை? என்று கேட்கிறார்கள். சொந்த ஆட்சியிலா இப்படி 'ரகளை'செய்வது என்று பாத்யதை கொண்டாடிப் பேசுகிறார்கள்! பாதிக்குதே பசி என்றுரைத்தாலோ, சோதிக்கிறார் ஆண்டவன் என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்கள் — தம் சொகுசான வாழ்க்கைக்கு.

ஆறுமாதமாகச் சம்பளம் தரப்படவில்லையாம், ஆரம்ப ஆசிரியர்களுக்கு! ஹைதராபாத்தில், நார்சார்பேட் என்ற இடத்தில்.

ஆரம்பக்கல்வி சர்க்காரின் நிர்வாகத்தில் இருக்கிறது.

இங்கு ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஆறுமாதமாகச் சம்பளம் தரப்படவில்லையானால், அவர்கள் என்ன செய்வார்கள்?

வட்டிப் பணத்தை வைத்துக்கொண்டு வாழ்வார்களா, வாடகைப் பணத்தைக் கொண்டு பிழைப்பார்களா, பங்கு மார்க்கட் இலாபத்தில் வாழ்பவர்களா? ஆறு மாதமாகச் சம்பளம் இல்லை! மாணவர்களுக்குப் பாடம் கற்றுத்தரவேண்டும்! பாடத்திலே முக்கியமான பகுதி, நாட்டுக்குச் சுயராஜ்யம் வந்துவிட்டது, நம்மவர்கள் ஆளுகிறார்கள், பஞ்சம் பசி பட்டினிக் கொடுமை போய்விட்டது — பக்ரா நங்கல் கட்டினார்கள் — என்பதாகும் — பட்டினி கிடந்துகொண்டு போதனை செய்யவேண்டும்!!

இந்த வேதனையை வெளி உலகுக்குக் காட்ட, அக்டோபர் 2-லிருந்து 4-ஆரம்ப ஆசிரியர்கள் உண்ணா விரதம் இருந்து வருகிறார்கள்.

செச்சே! இந்த வாத்தியார்களுக்கு ஏன் இப்படி புத்தி கெட்டுவிட்டது; உண்ணாவிரதம், சத்யாக்கிரகம் என்றெல்லாம் தொல்லை தருவதா!— என்று கண்டிக்கமட்டும் கனம்கள் கிளம்புகிறார்கள். ஆட்சியின் இலட்சணமோ, ஆறுமாதமாக ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சம்பளம் இல்லை— என்றிருக்கிறது.

★

தணலில் தங்கம்

5

செங்கமலக் கிழவி சொன்னபோது 'இருக்காது' என்று என் மனம் எவ்வளவோ ஆறுதல் அடைய முயன்றது என்றாலும், சாவுக்குப் போனவர்களில் ஓரகத்தியும் கணவரும் திரும்பிவராமல், கணவருடைய அண்ணன் மட்டும் வந்ததைக் கண்டதும் என் நெஞ்சம் துணுக்குற்றது.

கூடத்து ஆணியில் பையையும் சட்டையையும் மாட்டிவிட்டுப் பலகையில் அவர் உட்கார்ந்ததும் "அக்கா வரவில்லையா?" என்று என் ஓரகத்தியைப் பற்றிக் கேட்டேன்.

"வருவாள். நாளை வருவார்கள் அவர்கள் இருவரும். இன்று கேழ்வரகு நாற்று நடவேண்டுமே அதனால் நான் வந்துவிட்டேன்" என்றார்.

வேழ்வரகு நாற்று நடுவது இந்தப் பெரியவருக்கு முக்கியமாகப் போய் விட்டதே; இருந்து மனைவியையும் அழைத்துவரக் கூடாதா. அல்லது அவரை மட்டுமாவது அனுப்பியிருக்கக் கூடாதா என்று எண்ணினேன். ஒருவேளை செங்கமலக் கிழவி சொன்னது உண்மைதானோ என்றும் திகைத்தேன். ஓரகத்தி எப்படியும் தன் கணவரை விட்டு விலகியே நிற்கின்றாளே, ஏன்? என்று புரியாமல் தவித்தேன்.

உண்ணுகிறபோது ஓரகத்தியின் கணவர் முகத்தைக் கண்டேன். அவர் முகத்தில் சோகத்தின் சாயல் பரவிக் கிடந்ததாக எண்ணிக்கொண்டேன். அடிக்கடி நிமிர்ந்து என் முகத்தைப் பார்ப்பதும், ஏதோ சொல்ல முயன்று தயங்குவதாக இருந்தார். "தண்ணீர் வேண்டுமா?" என்றேன்.

"ஆம்... இல்லை... வந்து, சொக்கப்பன் எப்படி இருக்கிறான் உன்னிடத்தில்?" என்றார்.

நான் ஏதும், மறுமொழி கூறாது இத்தனை நாள் வீட்டையோ பிறவற்றையோ பற்றிக் கொஞ்சமும் எண்ணாதவர் இன்று மட்டும் ஏன் இதைக் கேட்கின்றார் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

"இல்லை... வந்து... அவனைக் கொஞ்சம் கவனித்துக்கொள்... நல்லவன்தான்..." என்று ஏதோ தொடர்பில்லாமல் பேசி முடித்தார். அதுவே அவர்க்குப் பெரு முயற்சியாகப் போனதை உணர்ந்தேன். இதைச் சொல்வதற்குள் அவர் பட்டபாடு! இப்படியும் ஒரு மனிதர் நடந்து கொள்வாரா என இரங்கினேன்.

செங்கமலக்கிழவியிடமிருந்து நான் சேதி தெரிந்துகொள்வதற்கு முன்னர் அவர் இப்படிப் பேசி இருந்தால் அதன் பொருளை நான் உணர்ந்து கொண்டிருக்கமாட்டேன். ஆனால் இப்போது அவர் விட்டுவிட்டுத் தொடர்பில்லாமல் பேசினாலும் எனக்கு அது தெளிவாக விளங்கியது.

ஏதும் செய்ய இயலாது திண்டாடித் தவிக்கும் அவர் நிலையை உணர்ந்ததும், அவர் மீது எனக்கு உண்டான இரக்கம் மிகுதியாயிற்று. 'பாவம்!' என்று எண்ணினேன். கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டு கைகழுவ நீர் எடுத்து வைத்தேன்.

மறுநாள் காலை கணவரும் ஓரகத்தியும் வந்து சேர்ந்தனர். பைகளில் நிறைய பழங்களும் உணவு விடுதிச் சிற்றுண்டிகளும் வாங்கி வந்தனர். மகிழ்ச்சியாகக காணப்பட்டாலும் அவர்கள் உடலில் களைப்புத்தான்

மா. கி. தசரதன்

மிகுந்திருந்தது. ஓடியாடித் திரியும் ஓரகத்தி முகம் கழுவித் துடைத்துக் கொள்வதற்குள் கீழே உட்கார்ந்து தூணில் சாய்ந்துகொண்டாள். கணவரோ பலகையில் சாய்ந்து உட்கார்ந்தவாறு நெடு மூச்சு விட்டார்.

"முதல் பஸ்ஸில் எப்படி வர முடிந்தது? அந்த ஊர் பஸ் வருவதற்குள் இது புறப்பட்டு விடுமே" என்று கேட்டார் ஓரகத்தியின் கணவர்.

"நாங்கள் நேற்றே வந்தோம். நம் ஊர் பஸ் அரை மணி நேரம் முன்னதாகப் புறப்பட்டுவிட்டதாம். ஆகவே அதில் வர முடியவில்லை. இரவு இரயில் நிலையத்தில் அண்ணியைப் பெண்கள் அறையில் தங்கச் செய்தேன். வசதியாகத்தான் இருந்ததாம்" என்று கணவர் மேலே வினாவிற்கோ விசாரிப்புக்கோ இடமில்லாதவாறு முடித்துவிட்டார்.

நேற்றுக்கு முன் தினம் வரை இதைக்கேட்டு நான் நம்பி இருப்பேன், ஆனால் இப்போது என் மனம் அதை நம்ப மறுத்தது. இதுவரை கணவரைக் கண்டதும் உள்ளத்து எழும் அன்பு இன்று வெறுப்பாக மாறியது. ஓரகத்தி என்னதான் என்னிடம் பகை காட்டி இதுவரை பழகி வந்தாள் என்றாலும், அவளைக் கண்டு நான் அருவருப்பு அடைந்ததில்லை. இன்று, அவளைக் காணவே என் கண்கள் கூசின. இதுவும் ஒரு வாழ்வா? என்று எண்ணி அவளைக் காணவே நாணினேன்.

அந்த இடத்தை விட்டு அப்பால் போகலாம் என கூடத்துப் பக்கம் போனேன். கணவர் சட்டையை மாட்டும் இடத்தில் ஏதோ காகிதம் கிடந்தது. வெளியே எடுத்துப் போடலாம் என எடுத்தபோது அதில் அச்சு எழுத்துக்கள் தெரிந்தன. பிறகு படித்துப்பார்க்கலாம் என மடியில் மறைத்துக்கொண்டு சமையல் அறைக்கு வந்து அதைப் பார்த்தேன். எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தைக் கொண்டு எழுத்துக் கூட்டிப் படித்தபோது என் மனம் பொருமியது. அவை இரண்டும் செங்கல்பட்டிலே உள்ள ஒரு சினிமாக் கொட்டகையின் நுழைவுச் சீட்டுகள். கிழிக்கப்பட்ட பகுதிகள்.

ஐயோ! இப்படியா சேதி...

நேற்று செங்கமலக்கிழவி சொன்னபோது இருக்காது பாட்டி, நிச்சயம் இருக்காது" என்று மறுத்துப் பேசினேன். ஆனால் இதோ என் கையில் சான்று. இனி என்ன செய்வேன் என்று இடிந்து போனேன்.

திருத்திவிடலாம். நல்லவர்தான் என்று நேற்றுக்கூட அந்தக் கிழவி சொன்னாள். ஆனால் இதோ இன்று நான் நம்பிக்கை இழந்து தவிக்கின்றேன். இனி இப்படித்தானா என் வாழ்வு கழிய வேண்டும்?

கணவருடைய புறக்கணிப்பைப் பெற்ற பல பெண்களைப்பற்றிக் கேட்டிருக்கின்றேன். பேகன் கைவிட்ட கண்ணகியைப்பற்றி ஏதோ நூலில் படித்திருக்கிறேன். கோவலன் கண்ணகியைப் பற்றிச் சினிமாவில் பார்த்

திருக்கிறேன். அந்தப் பேகன் மனை விக்காகவாவது புலவர்கள் பாடினார்களாம். கோவலன் கண்ணகிக்காவது பொருள் தேவைப்பட்டபோது கணவன் அருகில் வந்தான்.

ஆனால் என் கதையோ புதுவகையாக இருக்கின்றதே. இதுவரை நிகழ்ந்ததாக யாரும் சொல்லக் காணோம். நிகழவும் இயலாது என்று நினைக்கின்றேன்.

குறையை எடுத்துச் சொல்லி அவரைத் திருத்தப் புலவர்களும் இல்லை; பொருள் தேவையும் கணவர்க்கு இல்லை.

இந்த இழி வாழ்க்கைக்கு நானும் துணைபோகின்றவாறு இருந்து உழல வேண்டுமா? என்று எண்ணிக் கலங்கினேன்.

மூலைக்கு ஒருவராக இருந்தபோதும் எல்லோர் மனதிலும் ஒரே எண்ணம் தான் குழம்பிக்கொண்டிருந்தது.

வீட்டில்தான் இப்படி என்றால் வெளியில் போனாலுமா பச்சையம்மாவின் தம்பிகள் இருக்கவேண்டும் என்று எண்ணியபோது, அவனே உள்ளே நுழைவதைக் கண்டேன். இந்த வேளையில் இவன் ஏன் இங்கே வருகிறான் எனத் திகைத்தேன்; எழுந்து தோட்டத்துக் கதவின் மறைவில் போய் உட்கார்ந்துகொண்டேன்.

"வாப்பா வா வந்திருக்கிறாய் என்றார்கள் ஆளையே காணோமே இன்று தான் வழி தெரிந்ததோ?"

என்று ஓரகத்திதான் அவனை வரவேற்றாள். கதவின் இடுக்கு வழியாகப் பார்த்தேன் கணவர் முகத்திலும் அவருடைய அண்ணன் முகத்திலும் கடுகடுப்பு மிகுந்து காணப்பட்டது. இருப்பினும்,

"எவ்வளவோ வேலை" என்று முணுமுணுத்து வரவேற்பதுபோல் நடித்தனர்.

களைத்துப் போய்க்கிடந்த ஓரகத்தி உடனே எழுந்து கொஞ்சம் மோர் கொண்டுவந்து கொடுத்தாள். ஓரகத்தியின் கணவர் ஏதோ வேலை இருப்பதுபோல் வெளியில் சென்று விட்டார். கணவர் மட்டும் கடுத்த முகத்துடன் அங்கே உட்கார்ந்திருந்தார்.

"ஏனப்பா இத்துணை நாட்களாக இந்தப் பக்கம் தலையே காட்டவில்லை:' என்றாள் மீண்டும் ஓரகத்தி.

"முன்போலவா அத்தை உங்கள் வீட்டிலே வேறு புதிய மனிதர்கள். நான் வந்தால் 'யார்?" என்று கேட்டாலும் கேட்கலாம்"

என்றான் அந்தக் கொடியவன்.

"புதிய மனிதர்கள் யார்? தங்கத் தைத்தானே சொல்லுகிறாய்? சொன்னால் தெரிகிறது" — என்று சொல்லி விட்டு, அவளும் உட்கார்ந்துகொண்டாள் பேசுவதற்கு.

எக்கெங்கேபோய் பேச்சு அவன் செய்திக்கே வந்து சேர்ந்தது இறுதியில்.

"திருமணம் இப்போது வேண்டாம் என்று தடுத்துவிட்டாயாமே?" என்றாள் ஓரகத்தி.

"அப்படியா எனக்குத்தெரியாதே;" என்று கணவர் இடையே கலந்து கொண்டார்,

"ஆமாம்"

"ஏன்?" — கணவரும் ஓரகத்தியும் சேர்ந்தே கேட்டனர்.

"இப்போது எதற்கு அந்தக் கால் கட்டெல்லாம். உலகத்திலே திருமணம் செய்துகொண்டவர்கள் எல்லோரும் என்ன வாரிக்கொண்டார்கள்? எத்தனையோ பெரியவர்கள் செய்துகொள்ளாமல் வாழ்ந்துவிட்டுப் போகவில்லையா?"

"அவர்கள் எல்லாம் பெரியவர்கள் உறுதியானவர்கள். நம்மால் அப்படி முடியுமா?" என்றாள் ஓரகத்தி.

"என்ன செய்வது முயன்று பார்க்க வேண்டும். முடியாதபோது செய்து கொண்டால் போயிற்று" என்றான் அவன்.

இதைக் கேட்டு என் மனம் அவனை எள்ளி நகையாடியது.

சில நாட்களுக்கு முன் தனித்து வந்து பிதற்றியவன் இன்று வேதாந்தம் பேசுகின்றானே, என மனத்துள் நகைத்துக்கொண்டேன்.

"என்னமோ வேறு காரணம் இருக்கும் நீ மறைக்கின்றாய்" என்றார் கணவர்.

"வேறு ஒன்றும் இருக்கிறது அது அவ்வளவு முக்கியமானது அன்று" என்றான்.

"அது என்ன வேறு?" என்றாள் ஓரகத்தி.

இந்த நிலையில் வெளியில் சென்ற ஓரகத்தியின் கணவர் உள்ளே வந்தவர் பேச்சு தொடர்ந்து நடப்பதைக் கேட்டு மீண்டும வெளியில் சென்றார்.

"நான் சினிமாத் துறையில் ஈடுபட்டிருக்கிறேன். வேடம் இடுகின்ற வேலையை இப்போது செய்துவருகின்றேன். போகப்போக முன்னுக்கு வர வழியும் வகையும் இருக்கிறது. இந்த நேரத்தில் கால்கட்டு ஏன் என்று நினைக்கிறேன்" என்றான் அவன்.

அதைக் கேட்டு ஓரகத்தி வெகு வியப்புற்று, "சினிமாவிலா... நல்லது தான், ஊம்... எல்லோருக்கும் கிடைக்குமா?" எனப் பெருமூச்சுவிட்டாள்.

கணவர் கலகல என நகைத்து "அதுதானே கேட்டேன். சாமியாராகப் போகிறேன் என்றாயே என்று திகைத்துப்போனேன். இப்போது புரிகிறது காரணம். அங்கே அழகான பெண்களைப் பார்த்தவன் இங்கே உறவென்றும் அதுவென்றும் நாட்டுப்புறத்துப் பெண்களைக் கண்டால் பிடிக்குமா?" என்றார்.

"என்ன அழகு போங்கள், எல்லாம் வெறும் வேடம். பூசுகின்ற மாவும் இடுகின்ற மையும் இல்லையானால் அவர்கள் பெண்களே அல்ல. இங்கே கிராமத்தில் சிலருக்கு இருக்கும் அழகு அவர்கள் தவம் செய்தாலும் கிடைக்காது. இவர்கள் சினிமாவில் சேர்ந்தால் அவர்கள் எல்லாம் புகழ் மங்கி இருளில் அடைபட வேண்டியதுதான்" என்று ஒரு சொற்பொழிவே செய்தான் எனலாம். அவன் அதைச் சொல்லும்போது ஓரகத்தியையே அடிக்கடி பார்த்துச் சொன்னான்.

அதைக்கேட்ட ஓரகத்தி வாயைப் பிளந்து "அப்படியா உண்மையாகவா? உண்மையாக அப்படியா?" என்று திரும்பத் திரும்பக் கேட்டாள்.

"ஆமாம். நான்ஏன் பொய்சொல்ல வேண்டும்?" என்றான் அவன்.

"சரி சரி! பசிக்கிறது. உணவுபடை—சாப்பிடவேண்டும். மீதி நாளை பேசலாம்" என்றார் கணவர்.

"ஏன், நீயும் வாயேன் உண்டு போகலாம்" என ஓரகத்தி விடுத்த அழைப்பை அவன் ஏற்காமல், "இன்றுவேண்டாம்" என்று சொல்லி வேறு நாள் சாப்பிடுவதாகச் சொல்லி விட்டான்.

"நாளை வருகிறாயா?" என்க்கேட்டுக்கொண்டே ஓரகத்தி வாயில்வரை சென்று வழிவிட்டு வந்தாள்.

வழக்கம்போல் ஓரகத்தியே கணவர்க்கு உணவு படைப்பாள் என நான் அங்கேயே இருந்தேன், நெடு நேரம் ஆனபின்னரும், கலம் எடுக்கும் ஓசை கேட்காததினால் உள்ளே எழுந்து போனபோது ஓரகத்தி கூடத்தில் ஒரு சினிமா நடிகை படத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டேன்.

கணவருடைய கலத்தை எடுத்துக் கழுவிவைத்து உண்ண அழைத்தேன். அப்போதுதான் உணர்வுவந்து இந்த உலகத்திற்கு வந்தவள்போல் ஓரகத்தி அடுப்படிக்கு வந்து படைக்கின்ற தொழிலை மேற்கொண்டாள். இனி அங்கே இருந்தால் பூசல்தான் என நான் மெல்ல தோட்டத்துப் பக்கம்போய்விட்டேன்.

... (தொடரும்)

6-ம் பக்கத் தொடர்ச்சி

நிச்சயமாக சேதுபதிகளின் பார்வையில் அவர் பட்டிருந்திருக்க முடியாது.

இவர்களெல்லாம், நாடு குறித்துக் கவலைகொள்ளும் பக்குவம் பெறுவதற்குப் பன்னெடு நாட்களுக்கு முன்பே, சங்கரலிங்கனார் 'சத்யாக்கிரகி' ஆகிவிட்டார்! ஆனால், அவர் சபை நடுவே இடம் பிடித்திடும் 'சத்காரியத்தில்' ஈடுபடவில்லை. கமிட்டிகளைக் கைவசப்படுத்தும் வித்தையில் ஈடுபட்டாரில்லை! 'தலைவர்' ஆக மறுத்து விட்டார்; தன்னலமறுத்து, தாய் நாட்டுக்காகப் பணியாற்றி விடுதலை விழாகண்டு, வெற்றிக் களிப்பு பெற்று, பெறவேண்டிய பேறு இதனினும் வேறு உண்டோ என்றெண்ணிப் பெருமிதம் கொண்டு இருந்த ஒரு பெரியவர்.

தாயின் மணிக்கொடி பாரீர்!
அதைத் தாழ்ந்து புகழ்ந்து
பணிந்திட வாரீர்!

என்ற தேசிய கீதம் கேட்டு மகிழ்ந்தவர்.

ஏழை என்றும் அடிமை என்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதர் என்போர்
இந்தியாவில் இல்லையே!

என்ற சிந்துகேட்டு, செந்தேன்! செந்தேன்! இதுநாள் வரை நான் கேட்டறியாத கீதம் என்று கூறிக் களித்தவர்!

தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில்
இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்

என்ற வீரக்கவிதை கேட்டு, நெஞ்சம் விம்மிடும் நிலையில், ஆம்! ஆம்! அழிந்து பட்டது ஆங்கில' அரசு! செவி குளிரக் கேட்கிறது சுதந்திர முரசு! இனி, பசியும் பட்டினியும் கொட்டுமோ! பஞ்சையும் பராரியும் இருப்பரோ! — என்று எண்ணிக் களிநடம் புரிந்தவர்.

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்
வீணில் உண்டு கொழுத்திருப் போரை
நிந்தனை செய்வோம்.

என்ற கீதம், ஊரூரும் பாடிடத் தேச பக்தர்கள் கிளம்பிடக்கண்டு, இனி என் நாட்டுக்குப் புது வாழ்வு நிச்சயமாகிவிட்டது! பொழுது புலர்ந்தது, புதுவாழ்வு மலர்ந்தது! என்று பூரித்துக் கூறியவர்.

காங்கிரஸ் அரசாள்கிறது, என்ற நிலைகண்டு, இனி ஜெயமுண்டு! பயமில்லை! மனமே! என்று சிந்துபாடிச் சிந்தை மகிழ்ந்திருந்தார்.

காமராஜர், ஆட்சிப்பீடம் ஏறி அமரக் கண்டதும், பட்டம் பெற்றறியார், பல்கலைக் கழகம் பார்த்தறியார், பாரதமாதாவின் சேவையன்றிப் பிறிதோர் பயிற்சியும் பெற்றார் இல்லை, எனினும், இவர் நாடாள வாய்ப்புக் கிடைத்து விட்டது, பாமர மக்கள் பாராளும் காலம் இது—என்ற கவிதா வாக்கியம், உண்மையாகிவிட்டது; இஃதன்றோ காணக்கிடைக்காத காட்சி என்றெல்லாம் எண்ணி எண்ணி இறும்பூதெய்தி இருப்பார். ஏன் எனில், காமராஜரும், விருதுநகர் — தொண்டர் குழாத்தில் இருந்த தூயமணி!

இவ்வளவு இன்ப நினைவுகளும், பொடிப் பொடியாகும்படியான பேரிடி அவர் நெஞ்சிலே விழுமென்று யார் கண்டார்கள்—

இந்தப் படுபாவிகள் இவ்வளவு மோசமாகிப் போவார்கள் என்று நாங்கள் எண்ணவில்லையே! எவ்வளவோ பாடுபட்டு, இவர்கள் ஆட்சிக்கு வர உழைத்தோம்... எல்லாம் வீணாயிற்றே...

என்று என்னிடம் அவர் கூறிய போது, தம்பி, உள்ளபடி, அவருடைய கண்களில் நீர் துளிர்த்துக் கொண்டிருக்கக் கண்டேன். அப்போதுகூட, நான், அவர் இறந்துபடுவார் என்று எண்ணிடவில்லை — காரணம், அவர் அவ்வளவு தெளிவாக, உணர்ச்சி வயப்பட்டவராக என்னிடம் பேசிக் கொண்டிருந்தார்—அறுபது நாட்களுக்கு மேலாகிவிட்டது உண்ணாவிரதம் துவக்கி—எனினும் என்னிடம் அரைமணி அளவுக்கு அவர் பேசுகிறார் என்றால், நான் என்ன எண்ணிக்கொள்வது. இப்போதல்லவா எனக்குப் புரிகிறது, உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் வேளையிலும் அந்த உத்தமருடைய உள்ளத்தில் அத்துணை உரம் இருந்திருக்கிறது என்ற உண்மை.

இன்றுபோல் அன்றும் நடுநிசி—நானும், நண்பர்கள் நடராசன், மதுரை முத்து ஆகியோரும், அவரைக் காணச் சென்றபோது. விருதுநகரில், காங்கிரஸ் தியாகி சங்கரலிங்கம் என்பார், உண்ணாவிரதம் இருந்து வருகிறார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதிலிருந்தே, எனக்கு அவரைக் காணச் செல்லவேண்டும் என்று அவா. அன்றுதான் முடிந்தது.

அந்தத்திடலில், நான் பலமுறை பேசியிருக்கிறேன் — கடைவீதியை ஒட்டி உள்ள மாரியம்மன் கோயில் திடல். வீரம், தியாகம், வாழ்க்கையை அர்ப்பணிப்பது, எதற்கும் அஞ்சாமல் கடமையைச் செய்வது, இன்னல் எதுநேரிடினும் கலங்காமலிருப்பது என்பனபற்றி, பலர் ஆற்றலுடன் முழக்கமிடுவதற்காக அமைந்துள்ள திடல் — நானும் அங்கு நின்று பேசியிருக்கிறேன். அந்தத் திடலில், வீரமும் தியாகமும் ஒருருவாகி, சங்கரலிங்கனாராகிக் காட்சி தரும் என்று, யார் எண்ணியிருந்திருக்க முடியும். அந்தத் திடலில் ஒரு சிறு ஓலைக் கொத்துக் குடில் அமைத்துக் கொண்டு, ஒரு கயிற்றுக்கட்டிலின் மீது அவர் படுத்துக்கொண்டிருக்கக் கண்டேன். அந்தக் குடிலின் மீது, காங்கிரஸ் கொடி பறந்து கொண்டிருந்தது.

காங்கிரசால்உயர்ந்தவர்கள் ராஜபவனத்தில் சயனித்துக்கொண்டிருக்கக் காண்கிறோம்; கோட்டைகளில் கொலுவிருக்கக் காண்கிறோம்; உல்லாச தோட்டக்கச்சேரிகளிலும், நளினிகளின் நாட்டியக் கச்சேரிகளிலும், உலவிக் களித்திடப் பார்க்கிறோம்; மாளிகைகளிலே பலர் குடி ஏறிடக் காண்கிறோம், காங்கிரசின் துணையினால்; இதோ குடிசையில் படுத்துக்கிடக்கிறார், உணவு உட்கொள்ள மறுத்துத் திங்கள் இரண்டு ஆகிறது, உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் நிலையில் கிடக்கிறார், காங்கிரசை வலிவும் பொலிவும் கொள்ளச்செய்யும் தொண்டாற்றிய வீரர்—முதியவர்.

காங்கிரஸ் கொடி, அந்தக் குடிலின் மீது பறந்துகொண்டிருக்கக் கண்டதும், தம்பி, எனக்குச் சொல்லொணாத வேதனைதான்! உள்ளே உயிர் போகட்டும், கவலையில்லை, உணவு உட்கொள்ளப்போவதில்லை —என்று கூறிக்கொண்டு ஒரு முதியவர் சாகும் நிலைக்குச்சென்று கொண்டிருக்கிறார்—அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டதே, காங்கிரஸ் ஆட்சி, அலங்கோலங்களைப்

போக்கிக்கொண்டு, அறவழி நிற்க வேண்டும் என்பதற்காக; அந்தக் குடிலின் மீது, அவர் உயிரைக் குடித்துக்கொண்டிருக்கும் கொடுமையை விளக்கவா, காங்கிரஸ் கொடி பறந்து கொண்டிருக்க வேண்டும்!

நடுநிசி-எனவே அங்கு நான்கைந்து பேர் மட்டுமே இருந்தனர் — ஒரு திரை போடப்பட்டிருந்தது, குடில் வாயிலில் — அதை நீக்கியபடி உள்ளே சென்று பார்த்தேன்—கயிற்றுக் கட்டிலின்மீது சுருண்டு படுத்திருந்த உருவம் தெரிந்தது—மங்கலான விளக்கொளியில், எனக்கு அவருடைய முகம் தெளிவாகத் தெரியவில்லை! சில விநாடி உற்றுப்பார்த்த பிறகே தெரிய முடிந்தது.

அமைதி குடிகொண்டிருந்த இடம்; நாங்கள், சத்தம் ஏதும் எழலாகாது, அவருக்குச் சங்கடம் ஏற்படும் என்று எண்ணிக்கொண்டபடி உடன் வந்த தோழரை, எழுப்பாதீர் ஐயா! என்று ஜாடை காட்டிச் சொன்னேன். அவரோ, தியாகத் திருவைத் தொட்டுத் தட்டினார். சங்கரலிங்கனார் கண் திறந்தார்—தூக்கமல்ல, சோர்வினால் செயலற்றுப்போன நிலை.

"ஐயா! அண்ணாத்துரை..." என்றார் அந்த நண்பர், ஒருவிநாடி அவர் என்னைப்பார்த்தார்—அந்தப் பார்வையின் முழுப்பொருளை 'பாவி' நான், அன்று சரியாக உணர்ந்துகொள்ள முடியவில்லை! செத்துக்கொண்டு இருக்கிறேனடா, செயலறியாதவனே! என்பதல்லவா அந்தப் பார்வையின் பொருள்.

மிகப் பெருங்குணம் வாய்ந்தவர் அந்தப் பெரியவர்.

"அண்ணாத்துரை..." என்று அந்த நண்பர் சொன்னதும், என் இரு கரங்களையும் பற்றிக்கொண்டார் — அவருடைய முகத்தருகே என் கரங்கள்—கண்ணீர் கரத்தில் தட்டுப்பட்டது, என் கண்கள் இருண்டுவிடுவது போன்றதோர் நிலை ஏற்பட்டது.

'தலைமாட்டிலே' நான் உட்கார அவர், இடம் செய்துதர, சிறிது, நகர்ந்தார்—நான் அமர்ந்தேன் — அவருடைய போர்வை கலைந்தது, எலும்புக்கூடாகத் தெரிந்தார். பழுத்தபழம்! பேரப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு காலந்தள்ளிக் களித்திடவேண்டிய வயது—உண்ணாவிரதம் மேற்கொண்டு அறுபது நாட்களுக்கு மேலாகிவிட்டன. பச்சைத் தமிழர்தான் பரிபாலனம் செய்கிறார், பாதி உயிர் போய்விட்டது என்று கூறுமளவு கூறிக்கொண்டு குமுறிக்கிடக்கிறார், காங்கிரஸ் ஆட்சியைக்காண வேண்டும் என்பதற்காக, கடமை உணர்ச்சியுடன் தொண்டாற்றித் தொண்டு கிழமான அந்தத் தூயவர்.

அவர், உண்ணாவிரதம் மேற்கொள்வதற்கான காரணங்களை விளக்க வெளியிட்ட அறிக்கையையும், அவர் வெளியிட்டகோரிக்கைகளையும் நான் பார்த்திருக்கிறேன்—அதிலே ஒன்றுகூட சொந்த நலன் பற்றியது என்று சுட்டிக்காட்ட, சூட்சித்திறன் மிக்கோரால்கூட, முடியாது. நாடே கேட்கும் கோரிக்கைகள். நல்லோர் எவரும் மறுக்க முடியாத கோரிக்கைகள். நாடாளுவோரின் கவனத்துக்கு நாள்தவறுமல் பல கட்சிகளும் வைத்த வண்ணம் இருக்கும் கோரிக்கைகள். இவைகளை நிறைவேற்றி வைப்பதாலே,

காங்கிரஸ் ஆட்சி அழியாது
இந்திய ஐக்யம் பாழ்படாது
எந்த வகுப்பாருக்கும் கேடுவராது
பெரும்பணச் செலவு ஏற்படாது
சட்டச் சிக்கல் எழாது.

மாற்றுக் கட்சிகளுக்கு மணிமகுடம் கிடைத்துவிடாது.

பச்சைத் தமிழரின் பரிபாலனத்துக்குக்கூடக் குந்தகம் ஏதும் நேரிட்டுவிடாது.

அவர் கோரிக்கை மொத்தம் 12—அதிலே 10, மத்திய சர்க்காரைப் பொறுத்தது, இரண்டே இரண்டுதான், மாகாண சர்க்கார் சம்பந்தப்பட்டது — என்று திருப்பூரில் முதல்மைச்சர் என்ற முறையில் காமராஜர், விளக்கம் அளித்திருக்கிறார்.

முதலமைச்சர் பேசினார், காங்கிரஸ்காரர் பேசவில்லை!

மந்திரிப் பதவி பேசிற்று, மனிதாபிமானம் பேசவில்லை.

விளக்கந்தரப்பட்டது, இதயம் திறக்கப்படவில்லை.

கேட்டது 12—அதில் 10-மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்டது என்று சட்ட நுணுக்கம் காட்டும் முதலமைச்சர் செய்தது என்ன? **சங்கரலிங்கனாரின் கோரிக்கைகளை டில்லிக்கு அறிவித்தாரா? அறிவித்து ஆவன செய்வதாக, அந்தப்பெரியவருக்குத் தெரிவித்தாரா? தெரிவித்துவிட்டு, என்னால் ஆனதைச் செய்வேன் என்று வாக்களித்தாரா?**

இல்லை! இல்லை! இப்போது விளக்கம் அளிக்கிறார்!

நாம் எதைச் சொன்னாலும் கேட்டுத் தீரவேண்டிய பக்குவத்தில் நாடு இருக்கிறது, நமக்கென்ன என்று பேசினாரேயன்றி, இதயத்திலிருந்தா எண்ணம் வெளிவந்தது?

மத்ய சர்க்கார் சம்பந்தப்பட்ட பத்து இருக்கட்டும்—இவர் சம்பந்தப்பட்ட இரண்டு இருக்கிறதே அதற்கென்னபதில் அளித்தார்! இப்போது விளக்கம் அளிக்கிறார். இவருடைய விளக்கம், அந்த வீரத் திருவிளக்கு அணைந்த பிறகு வெளிவந்திருக்கிறது. எத்துணை அன்பு ததும்பும் நெஞ்சம், தம்பி, நமது முதலமைச்சருக்கு. எனக்குப் பழக்கமில்லை, உனக்குத் தெரிந்திருக்காது, சங்கரலிங்கனாரை, காமராஜருக்குத்தெரியாதா. இப்போது காமராஜர், காரில் போவார், நடந்துசெல்லும் நண்பர்களைக் கண்டு உறவாட இயலாது; முதலமைச்சர் என்ற முறையில் அது முடியாததாகிவிட்டிருக்கக் கூடும்; முன்பெல்லாம், கடைவீதியில் கண்டிருப்பாரே, அந்தக் கடமையாற்றிய வீரரை, திடலில் பார்த்திருக்கக்கூடுமே அந்தத் தியாகியை! விருதுநகர்தானே அவர் இருப்பிடம்! ஏன், சங்கரலிங்கனாரின் மாண்பை மறந்திடத் துணிந்தார்? யார் கேட்கமுடியும்? ஆச்சாரியாராக இருந்தால் கேட்கலாம்—கேட்கலாமா—கடாவலாம் சாடலாம், கிளர்ச்சி செய்யலாம், கவிழ்த்தேவிடக் கிளம்பலாம்—காமராஜர் பச்சைத் தமிழராயிற்றே! சங்கரலிங்கனார் உயிர்த்தியாகம் செய்துகொண்டாரே, என்பாய். ஆமாம்—என்ன செய்வது — பரிதாபமாகத்தான் இருக்கிறது—இருந்தாலும்......' தம்பி! இப்படிப் பேசிட முடிகிறதே,

இன்று. இப்படிப்பட்ட தமிழகத்தில், எப்படி இருப்பார், சங்கரலிங்கனார். மரணம் மேல், என்றார்.

"ஐயா! இன்றைய ஆட்சி கருணைக்குக் கட்டுப்படுவதாகக் காணோமே. ஆட்சியை நடத்தும் கட்சி, இது பற்றிக் கவலைப்படுவதாகத்தெரியவில்லையே; எத்துணை பயங்கரமான பலி கொடுத்தாலும், திருந்தும் என்று தோன்றவில்லையே. இந்தஆட்சியிலே,உண்ணாவிரதம் இத்துணை உறுதியுடன் இருக்கிறீரே...பலன் இராதே..."

என்று நான் கூறினேன்—தட்டுத் தடுமாறிக்கொண்டுதான்-அவரோ அனுபவமிக்கவர், நான் பள்ளிச்சிறுவனாக இருந்த நாட்களிலேயே பரங்கி ஆட்சியை எதிர்த்திடும் பணியில் ஈடுபட்டவர்—அவருக்கு நான், யோசனை கூறுவது என்றால், சரியான முறையாகுமாஎன்ற அச்சம் என்னைப் பிய்த்தது. இவ்வளவு இன்னலை, இந்தத்தள்ளாத வயதிலே அனுபவிக்கத்தான் வேண்டுமா என்று நான் பதறியதால் கேட்டேன். தம்பி! அவர் சொன்ன பதில், என்னைத் திடுக்கிட வைத்தது, அப்போது; இப்போது கண்களைக் கலங்கச் செய்கிறது; **இல்லை... நான் செத்துவிடுகிறேன்...பிறகாவது பார்ப்போம்... சண்டாளர்கள்... எவ்வளவோ கண்டித்துக் காட்டுகிறீர்கள்... திருந்துகிறார்களா......** என்று அவர் சொன்னார், நெஞ்சு உலர்ந்ததை அறிந்து, பக்கத்தில் ஒரு நாற்காலிப் பலகை மீது இருந்த தண்ணீர்க் குடத்தைப் பார்த்தார். மண்பாண்டம் தம்பி! குளிர்ந்த தண்ணீர்! பக்கத்தில் ஒரு முழுங்கு தண்ணீர் மட்டுமே கொள்ளத்தக்க சிறு மண்குடுவை! அதிலே தண்ணீர் நிரப்பி, அவர் வாயருகே கொண்டு சென்றேன்—நாகரீக உணர்ச்சியை அந்த நேரத்திலும் காட்டியதைக் கேள் தம்பி—அந்தக் குடுவையை அவர் தம் கரத்தால் வாங்கி, இரண்டுகரண்டி அளவு தண்ணீர் பருகினார்.

பிறகு, அவர், மெள்ளப் பேசலானார்—எனக்கு, அவருக்குக்களைப்பு மேலிட்டுவிடுமே என்று பயமாக இருந்தது; அவரோ, தமக்கு 'முடிவு' விரைவிலே இருக்கிறது என்ற எண்ணத்தினாலோ என்னவோ, என்னிடம் பேசவேண்டியதைப் பேசிவிட வேண்டியதுதான் என்று எண்ணிக்கொண்டவர் போலப் பேசினார்.

எல்லையை வாங்க முடியாதா?

இதில் என்ன கஷ்டம்?

இதய சுத்தியோடு இரண்டு மணி நேரம் ஆந்திர சர்க்காருடன் பேசினால், காரியம் நடக்காதா...?

என்று கேட்டார்... பதில் நானா கூறவேண்டும்... நாடு அல்லவா அந்த நல்லவரின் கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டும்.

கவர்னருக்கு ஏன் இலட்சஇலட்சமாகச் சம்பளம்? ஒரு வடநாட்டான்... நீங்கள் கண்டித்தீர்கள்... நியாயம்... ஏன், வீண் செலவு... என்ன பிரமாதமான வேலையாம், கவர்னருக்கு... காலணா செலவில்லாமல், கச்சிதமாக எங்கள் வி. வி. சண்முக நாடார் பார்ப்பாரே, இந்த கவர்னர் வேலையை...

என்று, அவர் கூறியபோது, நான் உருகிப்போனேன்.

சங்கரலிங்கனார், காங்கிரஸ்காரர்—என்றாலும், காரியமாற்றும் ஆற்றல் கொண்டவர் வி. வி. சண்முகம், எனவே அவர் காங்கிரஸ்காரராக இல்லாதுபோயினும் பரவாயில்லை, என்று எண்ணிய அரசியல் கண்ணியம் என்னை உருகச்செய்தது.

எனக்கு, அவர், பேசப்பேச, நாம் அவருக்கு மெத்தச் சங்கடம் தருகிறோமே, என்ற பயமே மேலிடத் தொடங்கிற்று. அவரோ பேசுவதையும் நிறுத்திக்கொள்ளவில்லை, என் கரங்களையும் விடவில்லை.

இந்த அளவுக்கு அவர் பேசினதாலேதான், நான், அவர் உயிருக்கு ஆபத்து இராது, என்று கூட எண்ணிக் கொள்ள நேரிட்டது.

காமராஜர் வரப்போகிறார்,இரண்டோர் நாட்களில் என்று நான் கேள்விப்பட்டதால், ஒரு தைரியம் கொண்டிருந்தேன் — காமராஜர், கனிவுகாட்டுவார், கோரிக்கைகளிலே சிலவற்றையாவது நிறைவேற்றிவைத்து, அந்தக் குணவானுடைய உயிரைக் காப்பாற்றிவிடுவார் என்று எண்ணிக்கொண்டேன்.

நான் கண்டேனா, நாடாள வந்தவர்கள், மனதை இரும்பாக்கிக் கொள்ளவேண்டும் எனபதை. காமராஜர், அதுபோலவே, மலை குலைந்தாலும் மனம் குலையாத தமிழனல்லவா (!) அதனால், பிணமானாலும் பரவாயில்லை, கோரிக்கைகளுக்கு இணங்குவதாகக் கூற மாட்டேன், கூறினால் 'கௌரவம்' என்ன ஆவது, என்று கருதுபவர் போலத் தம் போக்கால் காட்டிக் கொண்டார்; சங்கரலிங்கனார், எழுபது நாட்களுக்கு மேல் உண்ணாவிரதமிருந்து, மூர்ச்சையாகிவிட்ட பிறகு, மதுரை மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மறைந்துபோனார். அவருடைய உயிர்தான் போயிற்றே தவிர, முதலமைச்சர் பதவிக்கு உள்ள 'கௌரவம்' இருக்கிறதே, அது போகவில்லை! போகவிடவில்லை காமராஜர்! சங்கரலிங்கனார்கள் சாகலாம், பிழைக்கலாம், காமராஜர், முதலமைச்சர் பதவிக்கு உள்ள கௌரவத்தைக் குலைத்துக் கொள்வாரா! உறுதியாக இருந்துவிட்டார்.

உண்மையிலேயே மோசமாகிவிட்டது.

உயிர் ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது.

பேச்சு நின்றுவிட்டது; ஊமைமூச்சுதான் இருக்கிறது.

எந்த விநாடியும் உயிர் போய் விடக்கூடும்.

மேல் மூச்சு வாங்குகிறது, கண் மூடிவிட்டது; கால் வீக்கம் கண்டுவிட்டது.

தம்பி! ஒற்றர் படையினரும்' உற்ற நண்பர்களும், பதவிக்குப் பிறகு பெற்ற தோழர்களும், நிலைமையைக் காமாராஜருக்கு, இதுபோலெல்லாம் எடுத்துச்சொல்லாமலா இருந்திருப்பார்கள். என்ன சொன்னாரோ முதலமைச்சர்!

அப்படியா...

ஆமாமாம்...

அட, பாவமே...

நிஜமாவா...

போய்விடும்னே சொல்றுங்களா...

பெரிய தொல்லையாப் போச்சே...

என்ற விதமாகத்தான் அவர் கூறியிருப்பார்; வேறு விதமான பேச்சு இருந்திருந்தால்தான், சங்கரலிங்கனரை நாடு இழந்திருக்காதே!

துணிவுடன், நடப்பது நடக்கட்டும் என்று இருந்துவிட்டிருக்கிறார்.

ஏழை அழுத கண்ணீருக்கே பயப்படவேண்டும், நேர்மையான ஆட்சியாளர் என்கிறார்கள், சுடலையில் தீ கொழுந்துவிட்டு எரிந்தது, காமராஜர் ஒரு சொட்டுக் கண்ணீர் விடவும் மறுக்கிறார்—வேறு வேலை நிரம்ப!

நான், சரவநனுலாவது...

என்று அந்த உத்தமர் என்னிடம் சொன்னார் — தமிழர் சமுதாயம் இன்று அடைந்துள்ள சீர்கெட்ட நிலையை உணராது இதுபோலப் பேசுகிறாரே எனறு நான் எண்ணி வருந்தினேன்.

பொட்டி சீராமுலு உண்ணாவிரதம் இருந்தார் —ஆந்திரம் அலறித்துடித்தது — சங்கரலிங்கனார் சாகக்கிடக்கிறார் என்று தெரிந்து, தமிழகம் என்ன கோலம் கொண்டிருந்தது—ஒவ்வொரு காங்கிரஸ்காரரையும் உரைத்தும் நிறுத்தும், பார்த்து, எந்தக் 'கோஷ்டி' என்று கண்டறியும் காரியத்தில் ஈடுபட்டிருந்தது!

எப்போதும்போல, மாணவ மணிகள்தான், தமிழ் இனம் இன்னமும் தலைதூக்கவே முடியாத நிலைக்குத் தாழ்ந்து அழுந்திவிடவில்லை என்பதைக் காட்டும்விதத்தில், மௌன ஊர்வலம் நடத்தியும், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியும், தன் கடமையைச் செய்தது.

மதுரையிலும் வேறு இரண்டோர் இடங்களிலும், நமது கழகம் அனுதாபக்கூட்டம் நடத்திற்று.

மற்றப்படி பார்க்கும்போது, தமிழகம், காமராஜ் கோலத்தில்தான் இருக்கிறது!

இந்தத் திங்கள் 21ம் நாள், தமிழகம் தன் கடமையைச் செய்யும்—நாடெங்கும் அனுதாபக்கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஒருவகையில் ஆறுதல்தான். ஆனால், தம்பி, அந்த உத்தமர் தம் இன்னுயிரை ஈந்தாரே, நாம் என்ன செய்யப் போகிறோம்.

தமிழ் நாடு என்ற பெயர் பெறுவதற்காவது நாம் முனைந்துநிற்கவேண்டாமா?

ஒப்பற்ற ஒரு உத்தமரின் தியாகம், இதற்குக்கூடவா, வழி ஏற்படுத்தாது.

சங்கரலிங்கனாரைத்தான் சாகடித்துவிட்டீர்கள், உங்கள் அலட்சியப்போக்கினல். அவருடைய உள்ளத்தில் ததும்பிக்கொண்டிருந்த ஆசையில், ஒன்றே ஒன்றையாவது, தமிழ்நாடு என்ற பெயர் தரும் காரியத்தையாவது செய்யக்கூடாதா என்று காங்கிரஸ் ஆட்சியைக் கேட்கும் அளவுக்காவது தமிழகம் செயல்படலாகாதா?

அந்தோ! அருமைத் தியாகியே! தமிழகத்திலேயன்றோ, உன் அரும்பெரும் தியாகம் கண்டனர்.

தாசர் புத்தி தலைக்கேறிவிட்ட தமிழகமாயிற்றே!

தருக்கரிடம் சிக்கிச் சீரழிந்து கிடக்கும் தமிழகமாயிற்றே!

உண்மைத் தியாகத்தின் உயர்வு அறியாத உலுத்தர்கள் உயர் இடம் பிடித்துக்கொண்டு, அன்பு, அறம், ஆகியவற்றை அழித்தொழிக்கும் நிலைக்கு வந்துற்ற தமிழகமாயிற்றே!

இங்கே அறம் ஏது? வீரம் எங்ஙனம் எழும்? நீதிக்கு வழி ஏது? நிமிர்ந்து நின்று உரிமை பேசுவோர் யார்?

என்றெல்லாம் அழுதபடி கேட்கத் தோன்றுகிறது.

அண்ணா! அப்படி ஒரே அடியாகத் தமிழகத்தைத் தாழ்த்திவிடாதே—தமிழகம் தூக்கமடைந்திருக்கிறது, உண்மை; ஆனால் உத்தமரின் உயிர்த்தியாகம், தமிழகத்தின் கண்களிலே குருதி பீறிட்டுவரச் செய்திருக்கிறது; கட்சிபேதமின்றி, இந்தக் கட்டத்தில், சங்கரலிங்கனாரின் தியாகத்தை நினைவிற்கொண்டு, தமிழ் நாடு என்ற பெயர் கிடைக்கச் செய்வதற்கான கிளர்ச்சியினைத் துவக்க ஆற்றல் உள்ளவர்கள் அனைவரும் ஒரு அணிவகுப்பாகுவர், அனுதாபக் கூட்டமே, அதற்கான நாளாகும்.

அந்தச் சூள் உரைத்திடும் நாளாக அமையும்—என்று கூறிடும் எண்ணற்ற தம்பிகளைக் காண்கிறேன். அவர்களிடம் எனக்கு நிரம்ப நம்பிக்கையும் உண்டு.

வீரத்தியாகி சங்கரலிங்கனாருக்கு நாம் அனைவரும், நமது நெஞ்சு நெக்குருக வணக்கம் கூறுகிறோம்.

அவர் காட்டிய தியாகப் பாதையில் செல்வதென்பது அனைவருக்கும் சாத்தியமானதல்ல, ஆனால் அவருடைய தியாகத்தை மதிக்க மறுப்பவர், மறந்து திரிபவர், தமிழராகார், மனிதராகார்.

தமிழகம் விடுதலைபெறுவதற்கே இந்த வீரத்தியாகம் பயன்படப் போகிறது.

பிறபிற இடங்களில், இத்தகைய சம்பவம், கலகத்துக்கு, பலாத்காரத்துக்கு வழிகோலும் — காண்கிறோம்.

தமிழகத்தின் முறை தனித்தன்மை வாய்ந்தது; அறவழியின்படி உள்ளது.

அறம் வெல்லும், நிச்சயமாக வெல்லும்; அறம் ஆர்ப்பரிக்காது, அத்துமீறிய காரியத்துக்கு மக்களைச் செலுத்தாது; அதன் பயணம் துரிதமானதாக இராது — ஆனால் தூய்மையானதாக இருக்கும்.

அறம் நிச்சயமாக வெல்லும்—ஆனால் அது கடுமையான காணிக்கைகளைக் கேட்கும்.

மிகக் கடுமையான காணிக்கை தரப்பட்டாகிவிட்டது; வீரத்தியாகி உயிரை அர்ப்பணித்தார்.

தமிழக விடுதலைக்காக, நாமும் காணிக்கைதரத் தயாராக வேண்டும்; அந்தப் பக்குவம் நமக்கு ஏற்படவேண்டும்; வீரத்தியாகியின் நினைவு, நமக்கு உள்ளத் தூய்மையை, உறுதியை, தியாக சுபாவத்தை தருவதாக அமைதல் வேண்டும். தியாகிக்குத் தலை வணங்குவோம்! தாயகத்துக்குப் பணிபுரிவோம்.

அன்பன்,

அண்ணாதுரை

காஷ்மீர்

காஷ்மீர் இந்தியாவில் ஒரு பகுதி—இந்தியப் பேரரசிலுள்ள பல ராஜ்யங்களில் இதுவும் ஒன்று—பல ராஜ்யங்கள் கொண்ட இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்துவிட்டது-என்று பேசப்பட்டு வருகிறது.

இதனை, பாகிஸ்தான் மறுத்துக் கொண்டிருக்கிறது.

சர்வதேசப் பிரச்னைகளில் இந்தத் தகராறும் ஒன்றாகிவிட்டது.

காஷ்மீர்—ஒரு பகுதி, பாகிஸ்தானிடமும் மற்றோர் பகுதி இந்தியாவுடனும் இருக்கிறது.

இப்போது உள்ளதுபோலவே, பாகிஸ்தான் வசமுள்ள பகுதி பாகிஸ்தானுடன் இணைந்துகொள்ளட்டும், இந்தியாவுடன் இணைந்துள்ள பகுதி இந்தியாவுக்கு இருக்கட்டும்; இந்த முறையில் சமரசம் செய்துகொள்ளலாம் என்று, நீண்டகாலத் தகராறுக்குப் பிறகு நேரு பண்டிதர் கூறுகிறார்.

பாகிஸ்தான்-இதனை ஏற்க மறுத்ததுடன், காஷ்மீர், எந்த நாட்டுடன் இணைவது என்பதுபற்றி காஷ்மீர் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தலாம் என்கிறது.

வாக்கெடுப்பு தேவைகூட இல்லை, இதோ பாருங்கள், காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்துவிட அரசியல் நிர்ணய சபையில் தீர்மானிக்கிறது என்று இந்தியா சுட்டிக்காட்டுகிறது.

காஷ்மீரில் நடைபெறும் அ. நி. சபையின் இலட்சணம எமக்குத் தெரியாதா! அது பொம்மை சபை! தலையாட்டிகள் ஸ்தாபனம் என்று பாகிஸ்தான் கூறுகிறது.

உனக்கா, எனக்கா? என்று இந்தியாவும் பாகிஸ்தானும் மல்லுக்கு நிற்க வேண்டியதில்லை. காஷ்மீர் தனிநாடு-இதன் சுதந்திர உரிமையை, இந்தியாவும் பாகிஸ்தானும் ஏற்றுக்கொள்ளட்டும் என்ற திட்டம்; ஷேக் அப்துல்லா மனதில் உருவாயிற்று.

இப்போது அவர் சிறையில் பூட்டப்பட்டிருக்கிறார் — டில்லியின் செல்லப் பிள்ளையாக குலாம்பக்ஷ் இருந்து வருகிறார்.

ஷேக் அப்துல்லா மீது இன்று வரை, எந்தவித வழக்கும் தொடுக்கப்படவில்லை.

இந்நிலையில், காஷ்மீர்—இப்போது தனி நாடு என்று சொல்லிக் கொள்ளத்தக்க விதத்தில் ஒரு காரியம் செய்திருக்கிறது; இந்தியாவில் ஒரு பகுதி என்று கருதிடத் தக்கவிதத்திலும் ஒரு காரியம் நடைபெற்றிருக்கிறது.

காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை காஷ்மீர் இந்தியாவில் ஒரு பகுதி—பேரரசில் ஒரு ராஜ்யம், என்று தீர்மானித்திருக்கிறது.

அதேபோது, காஷ்மீருக்குத் தனிக் கொடியும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது!

காஷ்மீர் பிரஜை, இந்தியப் பிரஜையாகலாம்; இந்தியர் காஷ்மீர் ஆகச் சில நிபந்தனைகள் உண்டு!

இப்படி, ஒரு பக்கம் ஒரு உருவமும், மற்றோர் பக்கம் வேறுவிதமான உருவமும் கொண்டதாக காஷ்மீர் அமைகிறது.

இந்த 'ஏற்பாடு' காஷ்மீரில் உள்ள இந்துக்களுக்குப் பிடிக்கவில்லை.

பிரஜா—பரிக்ஷத் இதனை எதிர்க்கிறது.

இந்தியாவுக்கு 'இந்தி' அதிகார மொழி—என்று இந்திய அரசியல் சட்டம் கூறுகிறது; காஷ்மீர் இந்தியாவில் ஒரு பகுதியாகிவிட்டதாகத் தீர்மானமாகிவிட்டது என்ற போதிலும், காஷ்மீருக்கு உருதுதான் அதிகார மொழி ஆக்கப்பட்டிருக்கிறது.

இது ஆபத்தானது — அதிகார மொழியாக, தோக்ரி—அல்லது காஷ்மீரி மொழிதான் இருக்க வேண்டும் என்பது பரிக்ஷத் வாதம்.

இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்யங்களுக்கும், உயர் நீதி மன்றம், இந்திய சுப்ரீம் கோர்ட்-ஆனால் காஷ்மீருக்கு மட்டும், நிலை வேறு.

காஷ்மீர் உயர்நீதி மன்றம் இந்திய சுப்ரீம் கோர்ட்டுக்கு உட்பட்டதல்ல.

இந்தியப்பேரரசின், எந்த ராஜ்யத்துக்கும், கவர்னர் இந்தியக் குடிஅரசுத் தலைவர் நியமிக்கிறார். ஆனால் காஷ்மீரில் மட்டும், ஏற்பாடு வேறு விதம்! இங்கு, ராஜ்யத் தலைவர், காஷ்மீர் சட்ட சபையால் தேர்ந்தெடுக்கப்படுவார்!!

எனவே, தனிக்கொடி — தனி கோர்ட்—தனி அதிகார மொழி—தனி ஆட்சித் தலைவர் தேர்தல்—என்று காஷ்மீருக்கு இருக்கிறது; என்றாலும் காஷ்மீர், இந்தியப் பேரரசில் இணைந்துவிட்டதாக டில்லி ஆனந்தப்படுகிறது.

காஷ்மீர்-பாகிஸ்தானுக்குப்போய்ச் சேரவில்லை-என்பது வேண்டுமானால், திருப்தி அளிக்கலாம், டில்லிக்கு; மற்றப்படி பார்த்தால், காஷ்மீர், தனி நாட்டுக்கு உரிய உரிமைக் கோலம் பூண்டிருப்பதுதான் தெரிகிறது.

சிறையிலிருந்து கொண்டே ஷேக் அப்துல்லா வெற்றி பெறுவது போலிருக்கிறது, இந்த ஏற்பாடு!

இந்த அளவு உரிமை — தனித்தன்மையாவது தந்தால்தான் காஷ்மீரிகள் முகத்தில் நான் தைரியமாக விழிக்க முடியும் — இல்லையென்றால் அவர்கள் தமது கோபப் பார்வையாலேயே என்னைச் சுட்டுச் சாம்பலாக்கி விடுவார்கள் என்று, குலாம் கூறி, டில்லியை, வளையவைத்து விட்டார் என்று தெரிகிறது.

இந்தியாவிடமிருந்து, பாதுகாப்பு, சலுகை, உதவி, எல்லாம் காஷ்மீருக்குக் கிடைக்கும்; அதேபோது, காஷ்மீர் மீது, நீதி, நிர்வாகம், மொழி, எதிலும், இந்தியா ஆதிக்கம் செலுத்த முடியாது, நமக்குத் தனிக்கொடி, தனி உயர்நீதி மன்றம், தனி அதிகார மொழி, நமது ராஜ்யத் தலைவரை நாமே தேர்ந்தெடுக்கிறோம் — இது நமக்குச் சுவை தருவதல்லவா — என்று குலாம், காஷ்மீரிகளைக் கேட்டுக் குதூகலப்படுத்த முடியும்.

ஒரு வகையில் பார்க்கும்போது, இந்த ஏற்பாடு, சிறையிலுள்ள ஷேக் அப்துல்லா பெற்ற வெற்றிபோலத்தான் தெரிகிறது.

★

REGD. NO. M. 4642

போன் நெ. 15

ஆண் உடையில் ஆரணங்கு

"நான் நம்பமாட்டேன் பொய்"

"இல்லை—ஆண் இல்லை. உண்மையில் நான் பெண்தான்" என்று சொல்லி அவளை நம்ப வைத்தாள் மேரிரீட். ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தாள்; பிரமித்துப் போனாள்.

இங்கிலாந்தில் மாலுமி ஒருவன் மணமான சில மாதங்களில் கடற்பயணம் மேற்கொண்டான். அவன் சென்ற சில நாட்களில் அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். போனவன் வருவான் வருவான் எனக் குடும்பத்தவர்கள் காத்திருந்ததுதான் மிச்சம். அவன் மீளுவான் என்ற நம்பிக்கை அற்றுப் போயிற்று. அவன் மனைவி தன் குழந்தையுடன் தாய்வீட்டிற்குப் போய்விட்டாள். மாலுமியின் வீட்டார் வாரம் தோறும் குழந்தையைக் காப்பாற்றுவதற்குப் பணம் அனுப்பி வந்தனர். தாயும் அதில்தான் வாழ்ந்து வந்தாள்.

அங்கு சென்ற சில நாட்களுக்குள் மகன் மாண்டுபோனான். மகன் இல்லை என்றால் மாமியார் வீட்டாரும் பணம் அனுப்பமாட்டார்களே என்ன செய்வது என்று சிந்தித்தாள். பிறகு துணிந்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

அனாதைச் சிறுமி ஒருத்தியை அழைத்தாள். ஆண் உடைகளை அணிவித்தாள்; 'அவன்' தன் மகன் என்றாள். வழக்கம்போல் அந்த வாரத்துப் பணம் வந்தது. வாங்கிக் கொண்டாள்.

அவளுடைய மாமியார் இறக்கும் வரை இந்தக் கோலத்திலேயேதான் அந்தச் சிறுமி வளர்க்கப்பட்டாள். பதின்மூன்று ஆண்டுகள் ஆண் உடையிலேயே இருந்த அவள் பிறகு அதைத் தன் இயல்பாகவே கொண்டுவிட்டாள்.

பிரஞ்சு மாது ஒருத்தியிடம் 'வேலைக்காரனா'கச் சில காலம் கழித்துப் பின்னர் பட்டாளத்து 'வீரன்' ஆனாள். பெரும் போர்களை உண்டாக்கிப் பேரரசுகளைச் சாய்த்த சர்வ வல்லமை கொண்ட காதல் அவள் வாழ்க்கையிலேயும் குறுக்கிட்டது. உடன் இருந்த ஆண் அழகன் ஒருவன் மீது ஆசைகொண்ட அவள் தன் ரகசியத்தை அவனிடம் கூறினாள். மகிழ்ந்தான்; மணம்கொண்டார்கள். ஆனால் இந்த வாழ்வு அவனுக்குச் சில நாட்கள்தான் நிலைத்தன. அவன் மணமான கொஞ்ச நாட்களில் இறந்துபட்ட பிறகு பிழைக்க வேறுவழி இன்றி மீண்டும் பட்டாளத்தில் சேர்ந்தாள்-ஆண் உடையில். அமைதியான வாழ்க்கை கிடைக்கவில்லையே என்று எண்ணி ஒரு நாள் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சென்றுகொண்டிருந்த கப்பலில் ஏறிவிட்டாள் அங்காவது அமைதி கிடைக்குமா என ஏங்கியவளாய்.

ஆனால் அந்தக் கப்பல் சேரவேண்டிய இடத்தைச் சென்றடைவதற்கு முன்னமே இடையில் கடற்கொள்ளைக்காரர்களின் தாக்குதலுக்கு ஆளாயிற்று. மேரிரீட் தாக்க வந்த கப்பல் படையில் சேர்ந்தாள்.

இங்குதான் அவள் ஆன் என்ற ஒரு ஆரணங்கைச் சந்தித்துத் தன் உண்மை நிலையைக் காட்ட வேண்டி வந்தது. ஆன், தான் காதலித்தவனைக் கைப்பிடிக்கக் கூடாது என்று தந்தை இட்ட கட்டளைக்குக் கீழ்ப்படியாததால் வீட்டைவிட்டு விரட்டப்படவே கடற்கொள்ளைக்காரருடன் சேர்ந்துவிட்டாள். அங்கு ஆண் உடையில் இருந்த மேரிரீட்டைக் கண்டு மையல் கொண்டாள். இதை அறிந்து கலங்கிய ரீட் "ஆன், நான் ஆண அல்ல; பெண்தான் உன்னைப்போல" என்று தெளிவுறுத்தினாள்.

உண்மை உணர்ந்த ஆன் திகைத்தாள்—ரீட்டின் துணிவைப் பாராட்டினாள். காதல் கைகூடவில்லை என்றாலும், நட்பு உருவாகியது. அன்று முதல் அவர்கள் இணைபிரியா நண்பர்கள் ஆயினர். அவர்களுடைய நட்பு பலருடைய பொறாமைக்குக் கூட காரணமாகும் அளவு நெருக்கமாக வளர்ந்தது. கொள்ளையர்களின் தாக்குதலுக்கு ஆட்பட்டுக் கைதானவர்களிடையில் ஒருவனைக் கண்டு மேரிரீட் காதல்கொண்டாள். அவள் காதலிக்கும் ஆண்மகனின் எதிரியைத் தானே போரிட்டு வென்றுவிடும் அளவுக்கு மேரியின் காதல் ஆற்றலைத் தந்தது.

இவ்வளவு ஆற்றலுடன் விளங்கிய மேரியின் வாழ்க்கை இறுதியில் சிறையில்தான் கழிந்தது கடற்கொள்ளைக்காரர்களைக் கைது செய்து காவலில் வைத்தபோது, அவர்கள் கூட்டத்தில் மேரியும் ஆனும் சேர்ந்து சிறையில் வாடி மாண்டனர். ஆயினும் பெண்களாகப் பிறந்த அவர்கள் ஆண்களாக வாழ்ந்த கதை வேடிக்கையானதுதான்!

★

copy available.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்